மாலை : 51 மணி : 1 சனவரி 2009 விலை ரூ.10

# திருக்கோயில்

இந்து சமய அறநிலையத்துறை வெளியீடு



# தமிழகத்தின் ஆலயங்கள் தங்கமாகும் காலங்கள்!

# பொன்னான வாய்ப்பு!



ஸ்மார்ட் கிரியேஷன்ஸ் பொன் ஆலயம் வழங்கும்

## 24கேரட் கோல்டு கோட்டிங்!

**அதிநவீனம், அற்புதம், உன்னத NTGD லண்டன் தொழில்நுட்பம்!**

- சிக்கனமான முறை
- நீடித்து நிலைக்கும் பொலிவு
- தமிழக அறநிலையத்துறையின் அங்கீகாரம்
- தங்கத்தின் அளவை துல்லியமாக கணக்கிடலாம்

தொடர்புக்கு :
K.S.S. நாராயணன்
9884877722



**கலசங்கள்** — உத்தேச மதிப்பீடு! உண்மை ஒப்பீடு!



| அளவு அடிகளில் | பாரம்பரிய முறை 7 லேயர் தங்க ரேக்கிங் | ஸ்மார்ட் கிரியேஷன் நவீன NTGD தொழில்நுட்பம் | உத்தேச சேமிப்பு |
|---|---|---|---|
| 1 | 35,000 | 8,000 | 27,000 |
| 2 | 2,19,000 | 48,000 | 1,71,000 |
| 3 | 4,66,000 | 1,00,000 | 3,66,000 |
| 4 | 6,64,000 | 1,45,000 | 5,19,000 |
| 5 | 9,77,000 | 2,14,000 | 7,63,000 |
| 7 | 18,00,000 | 3,94,000 | 14,06,000 |

**கொடி மரம்** — உத்தேச மதிப்பீடு! உண்மை ஒப்பீடு!



| அளவு அடிகளில் | பாரம்பரிய முறை 7 லேயர் தங்க ரேக்கிங் | ஸ்மார்ட் கிரியேஷன் நவீன NTGD தொழில்நுட்பம் | உத்தேச சேமிப்பு |
|---|---|---|---|
| 9 | 23 ல | 6 ல | 17 ல |
| 12 | 31 ல | 8 ல | 23 ல |
| 20 | 52 ல | 14 ல | 38 ல |
| 30 | 78 ல | 21 ல | 57 ல |
| 40 | 104 ல | 27 ல | 77 ல |



**கவசம்**

| அளவு | பாரம்பரிய முறை 7 லேயர் தங்க ரேக்கிங் | ஸ்மார்ட் கிரியேஷன் நவீன NTGD தொழில்நுட்பம் | உத்தேச சேமிப்பு |
|---|---|---|---|
| 12"x 9" | 28,000 | 10,000 | 18,000 |
| 15"x12" | 47,000 | 16,000 | 31,000 |
| 24"x18" | 1,12,000 | 39,000 | 73,000 |
| 36"x24" | 2,25,000 | 78,000 | 1,47,000 |



**தங்கரதம்**

| அளவு | பாரம்பரிய முறை 7 லேயர் தங்க ரேக்கிங் | ஸ்மார்ட் கிரியேஷன் நவீன NTGD தொழில்நுட்பம் | உத்தேச சேமிப்பு |
|---|---|---|---|
| 8 | 69 ல | 15 ல | 54 ல |
| 9 | 84 ல | 18 ல | 66 ல |
| 10 | 99 ல | 22 ல | 77 ல |
| 12 | 1,48 ல | 33 ல | 115 ல |

தங்கத்தேர், கொடிமரம், கலசங்கள், விமானம், கவசங்கள், பிரபை, மூலஸ்தான கதவுகள்

பித்தளை, தாமிரம், வெள்ளி மற்றும் பஞ்சலோகத்தில் 24கேரட் கோல்ட் கோட்டிங் சிறப்பாக செய்து தர இயலும்

SP 15, அம்பத்தூர் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை - 600 058. Tel : 044 2833 2655/4205 9911




# திருக்கோயில்

திருவள்ளுவர் ஆண்டு 2040 - தை மாதம்
மாலை : 51 மணி : 1 சனவரி 2009


## அன்பார்ந்த வாசகப் பெருமக்களே!

வணக்கம்.

தமிழர் தம் தலைப் பெரும் விழாவான பொங்கல் விழாவும், தைப்பூசப் பெருவிழாவும், பொலியும் தைத் திங்கள் பிறந்து விட்டது. இந்த தைத்திங்கள் பூசத்திருநாளில் காவிரியில் நீராடுவதும், தெய்வங்களைப் போற்றுவதும் உயர்ந்ததெனப் புராணங்கள் செப்பும், நம்வாழ்வை வளப்படுத்தும் செய்திகளாகும்.

காவிரியில் நீராடி, சிவலிங்கம் அமைத்து வழிபட்டுப் பேறுபெற்ற **''அன்னை அகிலாண்டேசுவரியின்''** திருவுருவத்தினை முகப்பாகக் கொண்டும் பாரதனில் மேன்மைமிகு பழனியம்பதியில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் **''அருள்மிகு தண்டாயுதபாணியின்''** இராஜ அலங்காரத் திருவுருவத்தை உள்முகப்பாகக் கொண்டும் இம்மாத இதழ் வெளிவருகிறது.

இம்மலரின் தொடக்கத்தில் **''தை மகளையும் தமிழ் மகளையும்''** வரவேற்கிறார் செந்தமிழ்வாரிதி முனைவர் இரா.செல்வக்கணபதியார். தாரணி போற்றும் தைப்பூசத்தின் பெருமைகளை விளக்குகிறார் தமிழாகரர் திரு.தெ.முருகசாமி அவர்கள்.

தைப்பூசம் என்றதுமே அன்பர்களுக்கு வடலூர் வள்ளல் இராமலிங்கர் நினைவுக்குள் வந்துவிடுகிறார். அவர் எழுதிய தத்துவக் கருத்துக்கள் செறிந்த இலக்கியக் கடிதத்தை இவ்விதழில் காண்கிறோம்.

சித்தவட மடத்தில் தங்கியிருந்த, சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குச் சிவபெருமான் தானே உவந்து வந்து திருவடி தீட்சைஅளித்துப் பெருமைப்படுத்திய நிகழ்ச்சியை புதுப்பேட்டை கோவிந்தன் அவர்களின் கருத்தோவியத்தில் காண்கிறோம். மேலும் இறைவன் தனது எளிவந்த வான் கருணையால் அன்பர்களுக்கு அருளப் பிட்சாடனராக வந்த கோலத்தை மன்னார்குடி சுகுமாரனின் **''பிட்சாடனர்''** சொன்மலரில் காண்கிறோம்.

கோதையின் திருப்பாவையில் ஈடுபட்டுத் தன்னை மறந்திருந்ததுடன், அவளால் **''அண்ணா''** என்று அழைக்கப்பட்ட பெருமை பெற்றவர் ஸ்ரீஇராமனுஜர். அவரை **''திருப்பாவை ஜீயர்''** என்றே அன்பர்கள் கொண்டாடுகின்றனர் என்ற செய்திகளை திருவரங்கம் இரா.ஆராவமுதன் விளக்குகிறார்.

ஆலய உலாவில், அபிமானத்தலமாக வைணவர்களால் கொண்டாடப்படும் **''திருப்பாதிரிப்புலியூர் அருள்மிகு வரதராஜப் பெருமாளை''** தரிசனம் செய்து வைக்கிறார் பாச்சுடர் வளவ. துரையன். சிறப்புக் கட்டுரையாக **''ஓமமாம் புலியூர் பிரணவ வியாக்ரபுரீசுவரர்''** திருத்தலத்தைப் பற்றிய கட்டுரை வெளியாகி உள்ளது. செல்வம் நல்கும் **''அருள்மிகு சிந்தாமணீசுவரரை''** பனையபுரம் அதியமான் தரும் படத்திலும் படைப்பிலும் காண்கிறோம்.

போதுமென்ற மனமும், இறையருளுமே வாழ்வில் என்றும் நிலையான இன்பத்தைத் தரும் எனும் உண்மையை வாரியார் சுவாமிகள் கட்டுரை விளக்குகிறது. வழக்கமான தொடரில் **''உலகம் உய்ய உதித்த உடையவர்''** பவனி வருகிறார்.

தை மாதம் தானியமும் தனமும் வீடு தேடி வருகின்றன. அந்த லட்சுமியின் வடிவங்களை வரவேற்கும் வகையில் **''திருமகளே வருக''** எனும் தலைப்பில் ஸ்ரீமத் தண்டபாணி சுவாமிகளின் திருமகள் அந்தாதிப் பாடல்களை இவ்விதழில் அறிந்து மகிழலாம்.

இந்த இனியவேளையில் அன்பர்கள் அனைவருக்கும் இதயம் கனிந்த பொங்கல், தமிழ்ப் புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுவதுடன், எல்லாம்வல்ல இறைவன் திருவருளினால் **''பொங்கும் மங்கலம் எங்கும் தங்குக''** எனப் பிரார்த்திக்கிறேன்.

அன்புள்ள

(த. பிச்சாண்டி, இ.ஆ.ப.)
முதன்மை செயலர்/
ஆணையர்


இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி சாலை,
சென்னை - 600 0 34.



# குறளோவியம்

ஏழாண்டுக் காலம் தண்டனை பெற்றுச் சிறையில் வாடிக்கொண்டிருந்தான் அந்த வாலிபன். செய்யாத குற்றத்திற்கு அவனுக்குச் சிறை வாழ்வு கிடைத்தது. குற்றம் புரியாத அவனுக்கு நீதிமன்றம் தந்த பரிசைஎண்ணி எண்ணிக் குமுறிக் கொண்டிருந்தான் என்றாலும் சிறை வாழ்வுக்கு ஏற்றாற்போலத் தன்னை மாற்றிக் கொண்டு, அந்த ஏழாண்டுக் காலத்தைக் கழிப்பதற்கு நெஞ்சில் உறுதியேற்றுக் கொண்டான்.

சிறைக் கைதிக்குரிய பணிகளைச் செம்மையாகச் செய்வதிலும் சிறையில் உள்ள நூல் நிலையத்தைப் பயன்படுத்திக் கொள்வதிலும் அவன் மிகுந்த அக்கறை காட்டினான். அங்கிருந்த அதிகாரிகளில் ஒருவனுக்கு ஏனோ தெரியவில்லை, அந்த வாலிபன்மீது தேவையில்லாத ஒரு வெறுப்பு! இத்தனைக்கும் சிறை விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டு அனைத்து அதிகாரிகளிடமும் அவன் பணிந்தே நடந்து வந்தான்.

சிறையில் உள்ள மற்ற கைதிகளின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதிலும் அவர்களுக்கு நோய்நொடியெனில் ஓடிச்சென்று உதவி செய்வதிலும் அந்த வாலிபனுக்குத் தனி ஆசை! அந்த நற்செயல் ஏனோ குறிப்பிட்ட அதிகாரிக்குப் பிடிக்கவில்லை. அதன் விளைவை அந்த வாலிபன் சிறைக்குள் அடிக்கடி அனுபவித்தான்.

வேண்டுமென்றே அவனைக் கடுமையான குரலில் கூப்பிட்டு, இழிவாகப் பேசுவான் அந்த அதிகாரி . சில நாட்களில் கைத்தடியால் அந்த வாலிபனை அடித்துவிட்டும் செல்வான். 'ஏனய்யா என்னை வீணாக அடிக்கிறீர்கள்' என அந்த வாலிபன் கேட்ட போதெல்லாம் அதற்குத் தண்டனையாக, சிறைக்கூண்டு கதவைத் திறக்காமல் சிறைக்குள்ளே சிறை வைத்து அவனை வதைக்கவும் தயங்கவில்லை.சோறு தண்ணீர் கொடுக்காமல்கூட அவனைப் பட்டினியால் துவளவிட்டதும் உண்டு.

ஏழாண்டுத் தண்டனையில் இப்படி இரண்டு ஆண்டுகள் ஓடிவிட்டன. இதற்கிடையே அவன் செய்திருந்த மேல் முறையீட்டின்பேரில் விசாரணை முடிவுற்று குற்றமற்றவன் எனத் தீர்ப்பு வழங்கப்பெற்று விடுதலை பெற்று விட்டான். இரண்டு ஆண்டுகள் சிறைப்பறவையாக இருந்த அந்த வாலிபன் தன் பெற்றோரைக் காணப் பிறந்த சிற்றூர் நோக்கிப் புறப்பட்டான்.

அவன் சென்ற வழியில் அந்த சிறை அதிகாரி பாதையில் விழுந்து கிடந்ததைப் பார்த்துத் திடுக்கிட்டான். அருகே சென்று கவனித்தான். அதிகாரியின் உடலில் பல பகுதிகளில் குருதி வழிந்து கொண்டிருந்தது. அவனைத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டு ''அய்யா! அய்யா!'' என்று அழைத்தான்.


அதிகாரி, கண்ணைத் திறந்தான். ''தண்ணீர் தண்ணீ'' என்று முனகினான். வாலிபன், பக்கத்திலிருந்த குளத்திற்குச் சென்று கை நிறையத் தண்ணீரை அள்ளிவந்து அதிகாரியின் வாயில் ஊற்றினான்.

வெறிபிடித்து ஓடிவந்த மாடு ஒன்று இப்படி முட்டித்தள்ளி உருட்டி விட்டது என்று அதிகாரி அழுதுகொண்டே சொன்னான். அவனைத் தூக்கி வாலிபன் தோளில் போட்டுக் கொண்டு மருத்துவமனைக்குச் சென்றான். அவன் குணமடையும் வரையில் அருகிலேயே ஐந்தாறு நாட்கள் இருந்து கவனித்து வந்தான்.

ஒருநாள், அந்த வாலிபன் அதிகாரியிடம் விடைபெற்றுக் கொண்ட போது அவன் கைகளை அன்போடு பிடித்துக் கொண்டு அதிகாரி கேட்டான். ''நான் உனக்கு எவ்வளவோ தீமை செய்திருக்கிறேன். ஆனால் நீஅதற்கு மாறாக இவ்வளவு உதவி செய்திருக்கிறாயே! அது எப்படி முடிந்தது உன்னால்?''

வாலிபன் பதில் கூறினான் புன்னகையுடன்

''அய்யா! நீங்கள் எனக்குச் செய்த தீமைகளையும், இப்போது நான் உங்களுக்குச் செய்த நன்மைகளையும், நான் மறந்துவிட்டேன். தீமை செய்தவர்களை தண்டிக்க அவர்கள் வெட்கப்படும்படி அவர்களுக்கு நன்மையைச் செய்து விட்டு அந்தத் தீமையையும் அதற்கு மாறாக செய்த நன்மையையும் மறந்துவிடல் வேண்டுமென வள்ளுவர் கூறியிருக்கிறார். இது, துறவறம் மேற்கொண்டோர்க்கு மட்டுமல்ல, அனைவர்க்கும் பெருந்தும்.''



மாண்புமிகு தமிழக முதல்வர்
டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்

அதிகாரி அந்த வாலிபனை நன்றிப் பெருக்குடன் தழுவிக் கொண்டு, தன்னை மன்னித்துவிடுமாறு கேட்டுக் கொண்டான்.

**''இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண**
**நன்னயம் செய்து விடல்.''**

*அதிகாரம் 32* *இன்னா செய்யாமை* *பாடல். 314*

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் குறளோவியம் நூலிலிருந்து நன்றியுடன் எடுத்து வெளியிடப்படுகிறது.

## இதழின் உள்ளே ...


| | | |
|---|---|---|
| 1 | தாரணி போற்றும் தைப்பூசம் - தமிழாகரர் தெ. முருகசாமி | 5 |
| 2 | தை மகளே வருக! தமிழ் மகளே வருக! - முனைவர் இரா. செல்வக்கணபதி | 7 |
| 3 | இராமலிங்கரின் இலக்கியக் கடிதம் - நா.ரா. முருகவேள் | 9 |
| 4 | சித்த வட மடத்தில் சிவபெருமானின் தரிசனம் - புதுப்பேட்டை வ. கோவிந்தன் | 13 |
| 5 | திருப்பாவை ஜீயர் - இந்திரா ஆராவமுதன், ஸ்ரீரங்கம் | 15 |
| 6 | கடலூர் - திருப்பாதிரிப்புலியூர் அருள்மிகு வரதராஜப்பெருமாள் | 18 |
| 7 | செல்வம் நல்கும் பழவேற்காடு சிந்தாமணீசுவரர் - பனையபுரம் அதியமான் | 22 |
| 8 | வினை விதைத்தவன் வினையறுப்பான் - திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் | 26 |
| 9 | பிச்சாடன மூர்த்தம் - க.சுகுமாரன், மன்னார்குடி | 30 |
| 10 | உலகம் உய்ய உதித்த உடையவர் - பெ. இராமநாதபிள்ளை | 33 |
| 11 | அருள்செய் புஷ்பலதாம்பிகை சமேத பிரணவ வியாக்ரபுரீஸ்வரர் | 37 |



# தாரணி போற்றும் தைப்பூசம்



தமிழாகரர் தெ.முருகசாமி

தமிழர்தம் வாழ்வு பலவிதமான விழாக்களோடு தொடர்புடையது. விழாக்கள் யாவும் கோயில்களோடும் கோயில்களைச் சார்ந்த குடிமக்களோடும் தொடர்பு உடையனவாகவே உள்ளன.

இன்றைய நாளில் தைப் பூசம் என்றதும் பழநி அருள்மிகு தண்டாயுதபாணித் திருக்கோயில் பற்றியும் இராமலிங்க வள்ளலாரின் வடலூர் திருத்தலம் பற்றியுந்தான் அனைவரது கவனத்திலும் இடம் பெறும் என்பது பொதுவான கருத்து. என்றாலும் இந்நாளைய இந்நினைப்பிற்கு முன்பே அக்காலத்தில் மயிலாப்பூரும், திருவிடைமருதூரும் தைப்பூசைத்தால் நினைக்கத்தக்க ஊர்களாக இருந்தன என்பது வரலாற்றுப்பதிவான உண்மையாகும்.

''மைப்பூசும் ஒண்கண் மடநல்லார் மாமயிலைக்

கைப்பூசு நீற்றான் கபாலீச்சரமமர்ந்தான்

நெய்ப்பூசம் ஒண்புழுக்கல் நேரிழையார் கொண்டாடும்

தைப்பூசம் காணாதேபோதியோ பூம்பாவாய்''

இப்பாடல் பெண்கள் நெய்யால் மறைக்கப்பட்ட பொங்கல் செய்து படைத்து வழிபட்ட சிறப்பை உணர்த்துகிறது. மூட நெய்பெய்து முழங்கை வழிவார் என ஆண்டாள் திருப்பாவையில் கூறிய சர்க்கரைப் பொங்கலைப் போன்றே மயிலாப்பூரிலும் பொங்கல் செய்து நிவேதிக்கப்பட்ட சிறப்பு சம்பந்தரால் பார்த்து பதிவு செய்யப்பட்டுள்ளது.

இப்படி மயிலாப்பூரின் தைப்பூசப் பெருமையைக் குறித்த சம்பந்தர் திருவிடை மருதூரில் நடந்த தைப்பூசச் சிறப்பை இருபதிகங்களில் குறிப்பிடுகிறார்.

''வாசங்கமழ் மாமலர் சோலையில் வண்டே

தேசம் புகுந் தீண்டியோர் செம்மை யுடைத்தாய்ப்

பூசம்புகுந் தாடிப் பொலிந்தழ காய

ஈசன் உறை கின்ற இடைமரு தீதோ?''

என்று வண்டைப்பார்த்துப் பேசுவார் போலப்பூசநாள்குறிப்பிட்டிடவர்,

''வருந்திய மாதவத்தோர் வானோர் ஏனோர்வந்தீண்டிப்

பொருந்திய தைப்பூசம் ஆடி உலகம் பொலிவெய்த''

எனப் பூசநாளில் தீர்த்தமாடுவோர் பற்றிய சிறப்பைக் குறிப்பிட்டார். ஞானசம்பந்தரைப்போலத் திருநாவுக்கரசரும், பூசச்சிறப்பைக் குறிப்பிடுகிறார்.

''பாசமொன்றிலராய்ப் பல பத்தர்கள்

வாசநாள் மலர் கொண்டடி வைகலும்

ஈசன் எம்பெருமான் இடைமருதினில்

பூச நாம்புகு தும்புனல் ஆடவே''

என்று பூசநாள் தீர்த்தப் பெருமையைத் திருநாவுக்கரசர் கூறினார். சம்பந்தரும் திருநாவுக்கரசரும் கி.பி. ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள். அவர்கள் காலத்திலேயே தைப்பூசம் கொண்டாடப்பட்ட குறிப்பு இலக்கியமாகப் பதிவாகியுள்ளனவென்றால் அவர்கள் காலத்திற்கு முன்பிருந்தே இவ்விழா நடந்து வந்திருக்க வேண்டும் என்பது உண்மையாகிறது. எனவே தமிழகமெங்கும் பரவலாகக் கொண்டாடப்பட்ட தைப்பூசவிழா மயிலாப்பூரிலும் திருவிடைமருதூரிலும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது என்பது தேவாரப்பதிவால் தெரிகிறது. இன்றைய நாளில் மதுரையில் தைப்பூசத்தன்று தெப்பக்குளத்தில் நடைபெறும் மீனாட்சி சுந்தரேசர் தெப்பத் திருவிழாக்காட்சி சித்திரைத் தேர்த் திருவிழாவிற்கு ஒப்பாக நடைபெறுகிறது.

திருவிடைமருதூர்த் தேவாரம் மட்டுமின்றி அவ்வூர்க் கல்வெட்டொன்றில் பிற்கால விக்கிரமசோழன் காலத்தில்



அருள்மிகு கழுகாசலமூர்த்தி

அன்னதானச் சிறப்புடன் நடந்த பூசவிழா பற்றிய குறிப்பு உள்ளது. மேலும் கொட்டையூர்சிவக்கொழுந்து தேசிகர்பாடிய திருவிடை மருதூர்த் தலபுராணத்தில், உரோமசமுனிவர் ஒருவரின் கட்டளையின்படி வீரசோழன் என்ற அரசன் காட்டைக் கெடுத்து ஊர் உண்டாக்கி ஆலயங்கட்டுவித்துத் தைப் பூசம் போன்ற விழாக்களை எற்படுத்தினான் என்ற குறிப்பு கூறப்பட்டுள்ளது.

சைவ சித்தாந்தத்தில் இறை, உயிர், தளை என்ற முப்பொருள் உண்மை போல மூர்த்தி, தீர்த்தம், தலம் என்ற மூன்று பற்றியும், ஆன்மிக உலகம் சிறப்பாகப் பேசும் நிலையில் திருவிடை மருதூரின் தீர்த்தங்கள் இருபத்தைந்தில், கல்யாண தீர்த்தத்தில், தைப்பூசத்தில் நீராடினால் பேறுகிட்டுமென்றும் தலபுராணம் கூறுகிறது. குருவாரமாகிய வியாழக்கிழமையோடு கூடிய பூசநாளாயின் தீர்த்தமாடுதற்கு மிகவும் சிறப்புடையதாம். இந்நாளில் நீராடிய பகீரதன் ஆகாய கங்கையை இப்பூமியில் கொண்டுவந்ததோடு தன் முன்னோர்களுக்கு நற்கதியைத் தேடித் தந்தானாம், இவனைப்போலவே, திருடிய பாவத்தால் திருவிடை மருதூரில் புழுவாய் கல்யாண தீர்த்தக் கரையில் ஜனித்ததால் பாவம் நீங்கித் தேவனான் என்றெல்லாம் திருவிடை மருதூரின் பூசநாள் பெருமைகள் தலபுராணத்தால் புகழப்பட்டுள்ளன.

இப்படித் தொடக்க காலத்தில் சிவன் கோயிலில் சிறப்பாகக் கொண்டாடப்பட்ட தைப்பூசம் காலப்போக்கில் முருகன் திருக்கோயில்களில் சிறப்பாகக் கொண்டாடும் வழிபாட்டு முறை எற்பட்டது. அதிலும் குறிப்பாகப் பழநியம் பதியே அனைவருக்கும் நினைவு வரக்கூடிய தலமாய், தைப்பூசத்தை நினைக்கச் செய்கிறது. இந்த தைப் பூசத்தில்தான் முருகனுக்கு அம்பிகை ஞானஒளியான வேல் கொடுத்து முதலில் தாரகாசுரனைக் கொல்வதன் மூலம் சூரபதுமனைக் கொல்ல ஆணையிட்டதாகப் பழநித் தல புராணம் கூறகிறது. மேலும் இந்திரகுருவான பிரகஸ்பதி முருகனுக்கு ஞான உபதேசம் அருளி ஞான வெளிச்சத்தைக் காட்டியதாகவும் அத்தல புராணம் கூறுவதால் அஞ்ஞான இருள் நீங்கி அருள் ஞானம் பெறும் நோக்கத்தில் மக்கள் பழநியில் தைப்பூசத்தில் கூடுகிறார்கள் என அனுமானிக்கலாம், இன்னும் அஞ்ஞானத்தைக் காவடியில் சுமந்து சென்று மலையில் இறக்குவதன் மூலம் ஞான வெளிச்சத்தில் மக்கள் நனையும் விழாவாகவே தைப்பூசத்தில் காவடி எடுத்துக் கொண்டாடப்படுகிறது எனலாம், இக்காவடித் தத்துவ ஒய்யாரம் பழநிக்கே உரியது என்பது தைப் பூசத்தின் அடையாளமாகும்.

இப்படித் தமிழ்நாட்டில் கொண்டாடும் தைப்பூசம், கடல் கடந்த நாடுகளில் வாழும் தமிழர்களாலும் கொண்டாடப்படுகிறது என்பது பெருஞ் சிறப்பான செய்தியாகும். மலேசிய நாட்டில் பினாங்கு, அலோர்ஸ்டார், ஈப்போ, கிள்ளான், கோலாலம்பூர், தைப்பிங், மலாக்கா, மூவார் போன்ற இடங்களில் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களால் கட்டப்பட்ட தண்டாயுதபாணி கோயில்களிலும் கொண்டாடும் தைப்பூசவிழா, தமிழர்களோடு மலாய் மக்களும் சீன மக்களும் சேர்ந்து வழிபடும் நிலையில் புகழ் பூத்த விழாவாக நடந்து வருவது ஆன்மிக உலகின் மகுடமான செய்தியாகும். இவ்வாறு உலகெங்கிலும் வாழும் புலம் பெயர்ந்த தமிழர்களால் தைப் பூசம் கொண்டாடப் படுவதால் இவ்விழாவைத் தாரணி போற்றும் தைப்பூசம் எனக்கூறிப் பேறு பெறுவோமாக.

★★★

# தைமகளே வருக!
# தமிழ்மகளே வருக!



முனைவர் இரா. செல்வக்கணபதி


உழவர் திருநாளாகிய பொங்கல் திருநாள் இவ்வாண்டு இரட்டிப்பு மகிழ்ச்சி தருவதாக அமைகிறது. வழக்கமான உற்சாகத்துடனான தை முதல் நாள், தமிழக அரசின் அறிவிப்பால் , தமிழ்ப் புத்தாண்டின் தொடக்க நாளாகவும் அமைவது பெருஞ் சிறப்பாகும். தை முதல் நாளில் தமிழ்ப் புத்தாண்டுடன் திருவள்ளுவர் ஆண்டின் தொடக்கமும் அமைவது வரலாற்றுச் சிறப்புமாகும்.

வேளாண்மையை வாழ்வாதாரமாகக் கொள்ளும் எல்லாநாடுகளிலும் அறுவடைத்திருநாளே பெருந்திருநாளாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. இந்திய மாநிலங்கள் பலவற்றிற்கும் தனித் தனியே குறிக்கத் தக்க திருநாள்கள் உள்ளன. அவைபோல் தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கு உரிய பெருநாள், தமிழர் திருநாளாகிய பொங்கல் திருநாளாகும்.

மார்கழியின் நிறைவு நாள் போகிப் பண்டிகையாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. போகி என்ற சொல் அளவற்ற இன்பங்களைத் துய்த்து மகிழும் இந்திரனைக் குறிக்கும். இந்திரன் தமிழகத்தில் மழைக் கடவுளாகக் குறிக்கப் பெற்றான். பூம்புகாரில் இந்திர விழா மிகச் சிறப்பாக நடைபெற்று வந்ததை இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம் பதிவு செய்துள்ளது. மழை வளம் தந்த இந்திரனுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில், பொங்கலுக்கு முதல் நாளே பொங்கலிட்டு இந்திரனுக்குப் படையலிடுவது இன்றும் மருதநிலப்பகுதியில் நிலவிவருகிறது. பூம்புகாரில் நிகழ்ந்துவந்த இந்திரவிழாவின் நிறைவு நாளாகப் போகிப்பண்டிகை அமைந்திருக்கலாம் என எண்ண இடமுள்ளது. தற்காலத்தில் நகரங்களில் பழைய பொருள்களைப் போக்கும் நாளாகப் போகி கொண்டாடப்பட்டு வருகிறது.

பயிர்களின் வாழ்வாதாரம் மழைமட்டுமன்று, கதிரவன் ஒளியும் இன்றியமையாத ஒன்றாகும்: நன்றி உணர்ச்சிமிக்க தமிழ் மக்கள் வீட்டு முற்றங்களிலும் திறந்த வெளிகளிலும் பொங்கலிட்டுக் கதிரவனுக்குப் படையல் இடும்நாள் தைப் பொங்கல் நாளாகும். சைவப் பெருமக்கள் சூரியனை சிவபெருமானின் எட்டு உருவங்களில் ஒன்றாகக் கொள்வர். எனவே, கதிரவனையே சிவனாகக் கொண்டு, அவனுக்குச் சங்கரன் எனச் சிவநாமம் சூட்டி இத்திருநாளைச் சங்கராந்தி என்று அழைத்துச் சிவ வழிபாட்டு நெறிமுறைகளோடு கொண்டாடி வருகின்றனர்.

புதுநெல் அறுவடை செய்து, குற்றி எடுத்து புத்தரிசியை உலையில் இட்டுப் பால் பெய்து, சிறிது உப்பிட்டுப் பெரும்பானையில் வெண் பொங்கல் இடுவர். அதனினும் சிறியபானையில் அதே போல் சர்க்கரைப் பொங்கல் இடுவர். இருபானைகளையும் அடுத்தடுத்து இறக்கி வைத்து, திருநீற்றுக்காப்பிட்டு, கழுத்தில்



மஞ்சள் நறுக்குகளை நூலில் கோத்துக் கட்டி அம்மை அப்பராகவே கருதி வழிபடுவது தமிழர் மரபாக இருந்து வருகிறது. மருத நிலத்து விளை பொருள்களாகிய வாழை, கரும்பு, மஞ்சள், இஞ்சி யாவும் பொங்கல் நாளில் படையலில் இடம் பெறுவது இது ஓர் அறுவடை நன்றித் திருநாள் என்பதை உறுதி செய்வதாக அமைகிறது. சிவாலயங்களில் பொங்கல் நாளில் அம்மையப்பருக்குச் சிறப்பு அபிடேக அலங்கார ஆராதனைகளோடு பொங்கலிட்டுப் படைக்கும் மரபும் நிலவி வருகிறது.

உழவர் பெருமக்களின் உற்ற தோழமை உடையன மாடுகள். பால் வளம் தருவதோடு, உழவுக்குக் காளைகளை ஈன்று உபசரிக்கும் பசுமாடுகளுக்கும், உழவுக்குத் துணை நிற்கும் காளைகளுக்கும் நன்றி செலுத்தும் உயரிய மரபுத் திருநாள் மாட்டுப் பொங்கலாகும். இது பொங்கலை அடுத்துத் தை இரண்டாம் நாள் கொண்டாடப்பட்டு வருகிறது. ஆடுகள் வளர்ப்புச் செல்லப்பிராணிகள், ஏனைய குதிரை முதலியனவற்றிற்கும் இத்திருநாள் சிறப்புச் சேர்க்கிறது. மாடு என்ற சொல் திருக்குறளில் தெய்வம் என்ற பொருளில் வருகிறது. மருதநிலப் பகுதியில் பொங்கல் திருநாளுக்கு நிகராகவும் மேலாகவும் மாட்டுப் பொங்கல் பெருஞ் சிறப்போடு கொண்டாடப்பட்டு வருகிறது. இல்லுறை தெய்வங்கள், குலதெய்வங்கள் மற்றும் இஷ்டதெய்வ வழிபாடுகளும் பல இடங்களில் மாட்டுப் பொங்கலன்று நிகழ்த்தப்பட்டு வருகின்றன. மூத்தோரை வணங்கி வாழ்த்துப் பெறுவதும் இந்நாளில் உண்டு.

தை மூன்றாம் நாள் கன்னிப் பொங்கல் எனப்படும். இது இன்று கிராமங்களில் கன்றுப் பொங்கல் என்றும், நகரங்களில் காணும் பொங்கல் என்றும் பலவாறு வேறுபடக் கொண்டாடப்பட்டு வருகிறது. மார்கழி முப்பது நாளும் திருவெம்பாவை ஓதி புலர்காலையில் நீராடிச் சிவனை வழிபட்டு வந்த கன்னிப்பெண்கள் நல்ல கணவன்மார்களைப் பெறுதற்பொருட்டு நிகழ்த்தும் நோன்புத்திருநாளாகவே இத்திருநாள் அக்காலத்தில் நிதழ்ந்து வந்துள்ளதாகத்தெரிகிறது. மார்கழி முப்பது நாளும் வாயிலில் கோலமிட்டு அதன் நடுவிடங்களில் பசுஞ் சாணத்தால் பிள்ளையார் பிடித்து வைத்து. அறுகும், பறங்கிப்பூவும் நாற்றி மறுநாள் அவற்றை விராட்டியாகத் தட்டி உலர்த்திட பெண்கள் இந்நாளில் நீர் நிலைகளுக்குச் சென்று, விராட்டிகளை நீரில் விடுத்து விண்னோக்கி தலைஉயர்த்தி வழிபடும் சடங்கு ஒன்றை ''எருவிட்டு இறைஞ்சுதல்'' என்று குமரகுருபர சுவாமிகள் குறித்தருளுகிறார். சென்னை முதலிய நகரங்களில் உறவினர்களும் நண்பர்களும், குடும்பத்துடன் சென்று அன்புக்கும், நட்புக்கும் உரியவர்களைக் கண்டு விருந்துண்டு மகிழும் திருநாளாகக் காணும் பொங்கல் கொண்டாடப்பட்டு வருகிறது.

தமிழர்களின் கலாசாரப்பண்பாட்டுத் திருநாளாகிய தைப்பொங்கல் நன்னாளில் அம்மையப்பரை வழிபட்டு நாம் வாழ்வு பெறுவோம். தமிழ்ப் புத்தாண்டையும் தைமகளே வருக! தமிழ் மகளே வருக! என வரவேற்போம்.

## உலக நல வாழ்த்து



உலகமெலாம் பருவமழை ஒத்தபடி பெய்யட்டும்

உழவரெல்லாம் தானியத்தை உவப்புடனே பெருக்கட்டும்

பலதொழில்கள் புரிகின்ற பாட்டாளி உயரட்டும்

பகுத்துணர்வில் தொகுத்துணர்வு பண்பாட்டை உயர்த்தட்டும்

கலகங்கள் போட்டிபகை கடந்தாட்சி நடக்கட்டும்

கல்லாமை கடன்வறுமை களங்கங்கள் மறையட்டும்

நலவாழ்வை அளிக்கும் மெய்ஞ்ஞானஒளி வீசட்டும்

நம்கடமை அறவாழ்வின் நாட்டத்தே சிறக்கட்டும்

- தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி

# இராமலிங்கரின் இலக்கியக் கடிதம்



**முன்னுரை**

திருவருட் பிரகாசவள்ளலார் ஆகிய இராமலிங்க அடிகளை, ஒரு சிறந்த அடியார், சான்றோர், அருளாளர், சித்தர், ஞானி என்றே பெரும்பாலும் நம்மனோர் பலரும் கருதிப் போற்றுவது வழக்கம். அடிகளார், வேறு பிற எத்தனையோ வகைகளிலும்கூடக் கருதியுணர்ந்து போற்றத்தக்கவராக விளங்குகின்றார்.

அடிகளார் ஒரு சிறந்த பெரும் கவிஞர், நல்ல இலக்கியப் படைப்பாளர், தத்துவப் பேரறிஞர், என்றெல்லாம் கருதிப் போற்றுதற்கும் கூடப் பல வகைகளில் தகுதியும் சிறப்பும் உடையவராவர்.

**கடிதக்கலை**

இலக்கியக் கூறுகளில், கடிதக் கலையும் ஒரு கூறாகும். எல்லோருமே கடிதம் எழுதுகின்றனராயினும், கலைத்திறம் அமைந்து, இலக்கியச் சிறப்பு வாய்ந்த கடிதங்களை, ஒருசிலரே எழுத இயலும். சிவபிரான், சேரமான் பெருமாளுக்கும், கொற்றவன்குடி உமாபதி சிவத்திற்கும் கடிதம் எழுதியருளிய செய்தியை, இலக்கிய அறிஞர்கள் அனைவரும் உணர்வர். மாதவி கோவலனுக்கு எழுதியனவாக, இரண்டு கடிதங்களைச் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறே காளிதாசரும், சகுந்தலை துஷ்யந்தனுக்கு எழுதிய கடிதமாக ஓர் அழகிய சுலோகத்தினைப் பாடியுள்ளார். சுவைமிக்க அழகிய கடிதங்களை எழுதுவதென்பது, ஓர் அரும்பெரும் கலைத் திறமையாகும். ஆங்கில மொழியில் 'லார்டு செஸ்டர்பீல்டு' 'வில்லியம் கூப்பர்' 'ராபர்ட் வால்போல்' முதலிய பேரறிஞர்கள் பலர் எழுதியுள்ள கடிதங்கள், சிறந்த இலக்கியங்களாக மதித்துப் போற்றப் பெறுகின்றன.

**திருமழிசைஅன்பர்**

இத்தகைய நிலையில், இராமலிங்க அடிகளாரும் இலக்கியச் சுவை மிகுந்த, தத்துவக் கருத்துக்கள் நிறைந்த இனிய கடிதங்கள் எழுதும் கலைத்திறம் அமைந்தவராகத் திகழ்கின்றார். சென்னைக்கு அணித்தாக உள்ள திருமழிசை என்னும் ஊரில் வைத்தியலிங்கதேவ முதலியார் என்பவர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் நமது அடிகளார்பால் பேரன்பு கொண்டு விளங்கினார். அவருக்கு முத்துச்சாமி என்னும் மைந்தர் ஒருவர் இருந்தார். அவரும் அடிகளார்பால் அன்பு மிக்கவர். சிவபிரான் மீது அவர் பாடிய பாக்களைப் பார்வையிட்டு அடிகளார் அவருக்கு ஒரு பாராட்டுரைக் கவியும் பாடியருளியுள்ளார். அடிகளார் வடலூர்ப் பெருவெளியில் எழுந்தருளியிருந்த காலத்தில், முத்துச்சாமி முதலியாருக்குத் திருமணம் நடைபெற்றது. அது போது வள்ளலாரின் **'திருக்கையால் திருநீறு அளிக்கப் பெற்றிலேனே'** என்று முத்துச்சாமி மனம் வருந்தினார். அச்செய்தியைக் கேள்வியுற்ற அருளே உருவான அடிகளார், முத்துச்சாமியின் திருமணத்திற்குத்தாம் வடலூரினின்று வர இயலாது போயினமைக்குரிய காரணத்தைத் தெரிவித்து, அவர்தம் உள்ளத்தை மகிழ்விக்கும் முறையில், ஒரு கவிதைக் கடிதம் தீட்டித் தக்கவர் ஒருவர் மூலம் கொடுத்தனுப்பினார்.

**கவிதைக் கடிதம்**

கவிதைச் சிறப்பும், இலக்கிய நயமும், தத்துவக் கருத்துக்களும், உலகியல் வாழ்க்கை உண்மைகளும் ஒருங்கே கலந்து நிறைந்து, கற்பார் உள்ளமெல்லாம் கொள்ளை கொள்ளும் வகையில், ஈடும் எடுப்புமுற்று அக்கடிதம் மிகச் சிறந்த தொன்றாக விளங்குகின்றது. அதன் கருத்துச் சுருக்கத்தை மட்டும் ஈண்டு ஒரு சிறிது கண்டு அமைவோம்.

''சிவபெருமான் திருவடிகளில் அன்பு மிக்கவன், அடியவர்களுக்கு அடியவன், தூய்மை என்னும் நீரில் மூழ்கி, வாய்மை என்னும் துகில் உடுத்து, திருநீறாகிய கவசம் தரித்து, இறைவனை அகத்தும் புறத்தும்

அருச்சனை புரிந்து சிவபோகம் என்னும் திருஅமுதை உண்டு, சீலம் என்னும் தாம்பூலம் தரித்து, அளவிலா இன்பம் அனுபவிக்கின்ற மூதறிவாளனாகிய முத்துச்சாமி என்னும் திருவாளனுக்கு, இராமலிங்கம் எழுதிவிடுத்த வாழ்த்துரைக் கடிதமாவது.

ஐயா நின் திருமணத்திற்கு வர இயலாமல் தடைகள் பல நேர்ந்தன. அத்தடைகளை அளவிட்டுக்கூற ஆயிரம் கோடி நாக்குகள் இருப்பினும் இயலாது, அவற்றை எண்ணிச் சொல்லுவதற்கு உடம்பெல்லாம் உள்ளமாகக் கொள்ளினும் போதா, எழுத முயன்றால் ஏட்டுக்கடங்காது. என்றாலும் அன்புமிக்க நின்பொருட்டு யான் சிறிது எழுதத் துணிந்தேன். யான் ஓர் ஏழை, சிறியரில் சிறியேன், எனக்கு அறிவே இல்லை என்பது நீஅறிந்ததே யாகும்.

**ஆணவம்**

செம்பிற் களிம்பு செறிந்தது போல, ஆணவம் என்பவள் ஒருத்தி அநாதி காலத்திலேயே பிரம்மராட்சசிபோல் என்னைப் பிடித்துக் கொண்டு எனக்கு மனைவியாகிவிட்டாள். அவள் கடவுளையும் உலகத்தையும் யான் காண வொட்டாள், எங்கும் எதுவும் இருள் வடிவமேயாகக் காட்டுவாள். கொடியவள் ஆகிய அவள், இரவு பகல், இன்பம் துன்பம், ஒளி வெளி என்பவற்றை, உள்ளவாறு எனக்கு உணர்த்தாமல், ஒன்றை மற்றொன்றாக மாற்றிப் பிறழவே காட்டுவாள். அரக்கியாகிய அவளிடமிருந்து தப்ப முடியாமல் எளியேன் மிகவும் இடர்ப்படுகின்றேன்.

**அஞ்ஞானம்**

அவள் பால் எனக்குப் பிறந்த பிள்ளை ஒருவன். அவன் அறிவு சிறிதும் இல்லாத மடப்பிள்ளை. பெயர் அஞ்ஞானம். அவன் என் அகக் கண்ணையும் புறக்கண்ணையும் மூடி என்னைப் பெரிதும் அல்லற்படுத்துவான். தன்னை இன்னான் எனத் தானும் காட்டான். என்னை இன்னான் என்று எண்ணவும் ஒட்டான். தன் தாயினும் கொடியவன். ஆயினும் என் விதியை நொந்து அவனை விரும்பி வளர்த்தேன். பொல்லாத மனைவியும் அறிவில்லாத பிள்ளையும் வாய்த்ததனால், உலகில் என்னை மதிப்பவர் ஒருவருமில்லை. அவன் வளர வளர, என் உற்றார் உறவினர் என்னை விட்டுப் பிரிந்தனர். யானும் அறிவு கெட்டு அலைகின்றேன். இந்த இரண்டு தொடக்குகள் போதா என்று மற்றும் பற்பல தொடக்குகளும் அடுக்கடுக்காக வந்து என்னைப் பற்றிக் கொண்டன.

**மாயை**

மாயை என்னும் மாது ஒருத்தி எனக்கு இரண்டாம் மனைவியாக வந்து வாய்த்தாள். சிறிய காக்கையின் கழுத்தில் பெரிய பனங்காயைக் கட்டியது போல, அவள் என்னுடைய கழுத்தைக் கட்டிக் கொண்டாள். அவள் செய்யும் மாயச் செயல்களுக்கு அளவேயில்லை. கொள்ளிவாய்ப் பேய்கள் கோடி சேர்ந்து ஒரு சிறு குழந்தையைப் பிடித்துக் கொண்டாற் போல, அவள் என்னை மணந்து கொண்டாள். அவளுடைய நடத்தையைப் பற்றிச் சொல்லத் தொடங்கினால், அஃது ஒரு பெருங்கதையாகி விடும். பிடாரியைப் பெண்டாகப் பெற்றாற்போல, இக்கொடும்பாவி எனக்கு மனைவியாயினாள். அடிமடி பிடித்தும், அரிய வம்பு இழுத்தும், மடிமாங்காய் இட்டும், அவள் செய்யும் கொடுமைகள் அளவுக்கு அடங்கா. என்னை உறங்கவிடாள், உறங்கு பாய் சுருட்டாள். இரவும் பகலும் என்னை இழுத்து அலைப்பாள். இவளால் யான் படும் இடர்கட்கு ஓர் எல்லையே இல்லை.

**மனம்**

பெருந்தவம் புரிந்தும் குரங்கையே பெற்றது போல, மனம் எனும் ஒரு புதல்வன் உலக்கைக் கொழுந்தென அவளிடம் எனக்கு உதித்தான். அவன் செய்யும் சேட்டைகள் அருவருப்பே விளைக்கும். அவன் விதிவிலக்கு அறியான், மிகவும் சிறியவன். ஆயினும் விண்ணும் மண்ணும் நடுங்க வினைகள் இயற்றுவான். காமக் குழியில் கடுகி விழுந்து திகைப்பான். கோப வெங்கனலில் குதித்து வெதும்புவான். உலோபச் சிறையில் உழன்று அலைவான். கோபக் கடலில் மூழ்கி மயங்குவான். சொல்வழி நில்லான், நல்வழி செல்லான், எலும்பைச் சுரண்டும் எரிநாய் போல்வான். என்னைத் தந்தை என்றும் எண்ணான். இவன் செயலெலாம் சொல்லின் கற்களும் நெகிழ்ந்து கசியும். மரங்களும் கண்ணீர் பொழியும். இமையாத் தேவரும் கண்களை இமைத்திடுவர். பிறந்த அப்பாவி இறந்தான் இல்லை!

**புத்தி**

காசிபன் மனைவி கடுந்தவம் புரிந்து பாம்புகள் தம்மையே பயந்தமை போல, புத்தி என்னும் மற்றொரு புல்லிய புதல்வன் அடுத்து எனக்குத் தோன்றினான். அவன் எளியரில் எளியன், வாய்மையும், தூய்மையும் வாய்ந்தவன். தாயுடன் பழகான், தமையனோடு அணையான், தறுகணாளரைச் சாரான், பாவம் என்னில் பதறி அயர்வான், எப்பாடும் படான், எவருடனும் சேரான், கங்குலும் பகலும் எங்கும் உலவுவான், ஒரு நொடிப் பொழுதும் வறிதே இரான்.

**சித்தம்**

நாடி நாடி நாயை ஈன்றது போல, மாயை என்னும் என் மனைவி, சித்தம் என்னும் ஒரு சிறிய குழந்தையைப் பின்னரும் பெற்றாள். உணர்விலி என்றே உலகோர் அவனைக் கூறுவர். அவன் வானமே குளமாய், உடுக்களே மீனாய், மதியமே தாமரை மலராய் நினைத்து, அதில் மூழ்கவும் பிடிக்கவும் கொய்யவும் எண்ணுவான். எழுவான், எட்டுவான் இயலாது இளைத்து இடர்ப்படுவான், என்னையும் இடர்ப்படுத்துவான்.

**அகங்காரம்**

இவன்போல் மற்றொரு புதல்வன், அகங்காரம் என்னும் அடங்காக்காளை, எனக்குப் பிறந்தான். அவன் செயல் பேசவும் வாய்கூசும். அவன் கூற்றுவர் கோடி கூடினாற் போலக் கொடியனாய் முளைத்து வளர்ந்தான். 'மூத்தவன் மூழை, இளையவன் காளை என்னும் பழமொழிக்கு ஏற்ப, முன்னுள்ள மூவரையும் முடுகி இழுத்து, அவன் எண்ணிலாக் குறும்புகள் இயற்றுவான். எல்லா ஆற்றலும் என்பால் உண்டெனத் தருக்குவான், செருக்குவான். தன்னைத்தானே தகைமையில் மதிப்பான். தானே பிறந்த தன்மையிற் பேசுவான். வீண் வாதிடுவான். துரியோதனன் போன்ற வணங்கா முடியன். முன்செய் பாவம் முற்றும் திரண்டாற் போல், இயம்பொனாக் கொடுமைகள் இயற்றுவான். பிள்ளையும் அல்லன், கொள்ளியும் அல்லன், இவன் செய்யும் இடர்களை எவர்பாற் சொல்லி என் துயர் ஆற்றுவேன்?

**கான்மியம்**

மாயை என்னும் மனைவியின் சூழ்ச்சியால், 'மாற்று காலுக்கு மறுகால்' ஆக, கான்மியம் என்னும் கபட வஞ்சகி, மூன்றாம் மனைவியாய் வந்து எனைச் சேர்ந்தாள். பேயின் மேலும் பெரியதோர் பூதமும்பிடித்தது போன்றது என்நிலை. கான்மியம் என்னும் கபட வஞ்சகி செய்யும் வீரம். யான் செப்பும் தகையதோ? ஒருத்தி அவளே உருவம் இரண்டு கொள்வாள். ஒன்றில் கரும்பும் அமுதமும் காட்டுவாள். மற்றொன்றில் காஞ்சி (எட்டி)யும் நஞ்சமும் தோற்றி வாட்டுவாள். இன்பமும் துன்பமும் கலந்து கலந்து ஈவாள். இவள் முன்நம் 'சபதம் என்றும் சாயாது' எனவுணர்ந்து அரகர என்று அரற்றி மெலிவேன்.

**முக்குணம்**

இக்கொடியவள் வயிறு கிழியவந்த சிறார்கள் மூவர். சத்துவம், இராசதம், தாமதம் என்னும் பெயரினர். எவ்வுலகத்தோரும் இம்மூவர் தம்மால் பற்பல வழிகளில் பரிபவப் படுவர் என்றால், எளியேன் படும் துன்பம் இயம்பவும் முடியுமோ? பகலும் இரவும் இப்பாவிகள் என்னை அலைப்பர் அதனால் கூக்குரலிட்டுக் குமுறுவேன், கதறுவேன். 'கிணறு வெட்ட பூதம் எழுந்தது என்னும் பழமொழி உண்மையாயிற்று இவரொடு வாழ என்னால் இயலுமா மூன்று மாதரும் முழுப்பாய் சுருட்டிகள் இவர்களில் ஒருவரும் இசைய வந்தாரிலர். இச்சையின் வழியே இணக்கி, வலுவில் என்னை மணந்து கொண்டோர். இவரால் நேர்ந்த எண்ணிலாத் துயரை யான் என்னென்று உரைப்பேன்.

**உடல் வீடு**

குடும்பத்துடனே குடித்தனம் செய்யக் குடிக்கூலிக்குக் கொண்டேன் ஒரு வீடு. அதிற்கண்ட காட்சிகள் கன விரோதங்கள். அவைதாம் இராமாயணத்தும் இல்லை. பாரதத்தும் இல்லை. உடல் ஆகிய அவ்வீடோ இழிவினும் இழிந்தது. எண்சாண் உள்ளது. மலமும் சலமும் மாறாது ஒழுகுவது. சுற்றிலும் ஒன்பது பொத்தல் உடையது. சீழும் கிருமியும் சேர்ந்து கிடப்பது. குப்பையும் நாற்றமும் மிகுந்தது அக்குடிசை. அக்குடிசைவீட்டில் கிடந்தும், இருந்தும், நடந்தும், நான் படும்பாடு நவிலுதற்கு அரியது.

**வீட்டுக்காரர்**

இந்தச் சிறு குடிசைவீட்டுக்கு உரிய தலைவர்கள் மூவர். அவர்கள் மூவரும் தறுகட்கடையர், தயவே இல்லார். ஒருவன் பணிசிரம் முதலாய்ப் பாதம் வரையில் வாது செய்திடும் கால வாதி, மற்றொருவன் கள்ளினும் மயக்கம் விளைத்துப் பேதைமை ஊட்டும் பெருந்தீப் பித்தன், மூன்றாமவனோ கொடுவிடம் ஏறும் கொள்கைபோல, இரக்கம் கொள்ளாமல் இடர் செய்யும் குளிர்ந்த கொள்ளி. இவர்கள் என்னோடு எப்போதும் இகல்வார். சிறிதும் இரங்கார். என் ஏழைமையும் பாரார்.

பிண்டம் என்னும் பெருங் குடிக்கூலி, அன்றைக்கன்றே நின்று வாங்குவர். ஒரு நாள் செலுத்தத் தவறினால் அருநோய் பற்பல அடிக்கடி செய்வர். இவர்தம் கொடுமைகள் எண்ணுந்தோறும், பகீரென்று உள்ளம் பதைத்துக் கொதிக்கும்.

**வல்வழக்கர்**

இத்தகையப் பலவாம் நெருக்கடிக்கு இடையில் கிடந்து நலிந்து வருந்தும் என்னுடன், மற்போர் கருதி வந்தவர் போலச் சிலர் வேதாந்தம் உரைப்பர், வாட்போருக்கு வந்தவர் போலச் சிலர் சித்தாந்தம் தெரிப்பர்,

தண்டாயுதப் போர் தாங்குவார் போல ஒருசிலர் இதிகாசநூல்கள்இசைப்பர், உலக்கைப் போர் உடற்றுவோர் போல ஒரு சிலர் இலக்கண நூல்கள் இயம்புவர், மடிபிடி போர்க்கு வந்தோர்போல மததூஷணைகள் வழங்குவர் ஒரு சிலர். மற்றும் பற்பல வீண்கதை பேசவிழைவர் சிலபேர். இங்ஙனம் வல்வழக்குக்கு வருபவர்கள் பற்பலர். நாக்கு உலரவும் நற்குரல் கம்மவும், சமயோசிதமாய்த் தக்கபடி பேசி, இவர்களுக்கெல்லாம் ஈடு கொடுத்தலில், இளைப்புற்று வருந்துவேன்.

**நாட்கடமை**

பின்னர் வீட்டின் பின்புறம் சென்று மலத்தைக் கழிப்பேன். பல்லைத் துலக்குவேன். சோமனைத் துவைப்பேன். நன்னீராடுவேன். நறுமலர் கொய்வேன். பூசைப் பொருள்கள் தேடுவேன். பாவை வைத்துப் பாடியாடும் சிறாரைப் போலச் செய்பணி புரிவேன். சுவருக்குச் சுண்ணம் பூசுதல் போல, நெற்றியில் நீற்றை நிகழப்பூசுவேன். உருத்திராக்கப் பூனை எனும்படி செபமாலை உருட்டுவேன். குரண்டகம் போல யோகம் கூடுவேன். இங்ஙனம் பூசைஇயற்றிய பின்னர், ஊன் பிண்டத்திற்கு உறுபிண்டம் ஈந்து, குடிக்கூலிக் கடன் குறையைத் தீர்ப்பேன். உண்ட இளைப்பு தொண்டருக்கும் உண்டு. ஆதலால், பகல் வேடத்தால் பலரை விரட்டி, நித்திரை என்னும் பரத்தையை நேர்ந்து கூடுவேன். இங்ஙனம் ஒவ்வொரு நாளும் இடைவிடா வேலைத் தொல்லையில், என் பொழுதெல்லாம் சரியாகக் கழிந்தொழிகின்றது.

அதனால்தான் அன்புமிக்க நினது திருமணத்திற்கு யான் இங்கிருந்து வர இயலாது போயிற்று- அது பற்றி நீ சிறிதும் வருந்தற்க.

**கவிதையின் நலம்**

இஃது இராமலிங்க அடிகளார், திருமழிசைஅன்பர் திரு. முத்துச்சாமி முதலியார்அவர்களின் திருமணத்திற்குத்தாம் வர இயலாமற் போயினமை குறித்து எழுதி விடுத்த கடிதமாகும். இக்கடிதம் உரை நடையில் அல்லாமல் கவிதை வடிவில் அமைந்துள்ளது. கவிதையாயினும் எத்தகையவரும் படித்து உணர்ந்து கொள்ளத்தக்க எளிமையும் தெளிவும் இனிமையும் நிறைந்ததாக இஃது அமைந்திருத்தல் வியப்பைத் தருகின்றது. உயர்ந்த தத்துவக் கருத்துக்களும், உலகியலில் நாடோறும் நாம் கண்டு வருகின்ற உண்மைகளும், இக்கவிதையில் சுவை நிரம்பமைத்து உணர்த்தப் பெற்றுள்ளன. ஞானிகள் தம் ஞான நிலையில் இவ்வுலகியல் வாழ்வை எவ்வாறு உணர்ந்து எங்ஙனம் மதிக்கின்றனர் என்பதை, இப்பாடல் இனிது விளக்குகின்றது.

**தத்துவ நுட்பம்**

ஆணவ மலம் உயிர்களைச் செம்பிற் களிம்பு போல அநாதியே பற்றி நிற்றலும், அதன் விளைவாக உயிர்களுக்கு அஞ்ஞானம் நிகழ்தலும், இறைவன் ஆணவ மலத்தைப் போக்க உயிர்களுக்கு மாயாமலத்தைஇணைத்துத் தனு, கரண, புவன, போகங்களைப் படைத்துக் கொடுத்தலும், அவ்வாற்றல் கேவல நிலையினின்று சகல நிலை எய்திய உயிர்கள் முக்குண வயப்பட்டுச் சஞ்சிதம், பிரார்த்தம், ஆகாமியம் என்னும் கன்மங்களைத் தேடிக் கொள்ளுதலும், அதனாற் பல உடல்களை எடுத்துப் பிறந்து இறந்து உழலுதலும் ஆகிய பல தத்துவ நுட்பச் செய்திகள், இப்பாடலில் நன்கினிதெடுத்து நயமுற விளக்கப் பெற்றிருக்கின்றன. அரிய பெரிய தத்துவக் கருத்துக்களை எளிய இனிய நடையில் யாவரும் உணர்ந்து உவந்து மகிழும் வண்ணம் அடிகளார் இப்பாடலில்விளக்கி யிருக்கும் திறம் வியந்து போற்றுதற்குரியது.

''குடும்ப கோரம்'' என்னும் தலைப்பில், இல்லற வாழ்வின் இயல்பினை எதிர்மறை முறையிற் பாடி, இல்லற வாழ்க்கை நடத்துதற்குரிய உடன்பாட்டு முறையினை அடிகளார் உய்த்துணர வைத்துள்ள நலம் உணர்ந்து மகிழத்தக்கது.

**முடிவுரை**

இங்ஙனம் எண்ணி உணருந்தோறும் பல நுண்ணிய பொருள்களை உணர்த்திக் கொண்டு நிற்கும் இவ்விலக்கியக் கடிதம். இராமலிங்கரின் இணையற்ற பெரு மாட்சி மையினை இனிது உணர்த்திக் கொண்டு விளங்குகின்றது எனலாம். உருவகக் கவிதைகளுள், இஃது உயரிய சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றது என்றால் மிகையன்று. இத்தகைய பல அரும்பெரும் பாடல்கள் அமைந்த திருவருட்பா என்னும் செந்தமிழ்த் தெய்வீகத் திருநூலை, நாம் அனைவரும் இடைவிடாது அன்புடன் ஓதி நலம் பலபெற்று உய்ய முயலுவோமாக.

நா.ரா.முருகவேள்

(தைப்பூச நன்நாளையொட்டி வெளியிடப்படும் அரிய கட்டுரை அருட்பிரகாச வள்ளலாரின் காணற்கரிய கருத்தோவியம்)

# சித்தவட மடத்தில் சிவபெருமானின் தரிசனம்

புதுப்பேட்டை வ.கோவிந்தன்.எம்.ஏ.,



உலகத்தில் பிறந்து வாழ்கின்ற பிறவிகளில் மிகச் சிறந்தது மானிடப் பிறவி. இதனால்தான் 'அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது' என்கிறார் தமிழ் மூதாட்டி ஒளவையார். இவ்வரிய மனிதப் பிறவியில் உலகிலுள்ள இன்பங்களில் மூழ்கிவிடாமல் அனைத்து ஆசைகளையும் அகற்றி துறவு நெறி பூண்டு இறைவனின் திருவருள் ஒன்றையே பெரிதெனப் போற்றி முக்தி பெற்றவர்கள்பலர்.

துறவு வழியில் இன்றி, இல்லற வாழ்வையும் துய்த்துக் கொண்டு, சமய நெறி பூண்டும் வாழலாம் என்பது சைவ மதக் கோட்பாடு. இத்தகைய வழியில் சிவப் பேறு பெற்றவர்களில் சுந்தரமூர்த்தி நாயனாரும் ஒருவர். சமயக் குரவர் நால்வரில் ஒருவரான இவருக்கு சிவபெருமான் திருவடித் தீட்சைஅளித்த இடம் **'சித்தவடமடம்'** என்னும் திருத்தலமாகும்.

மேற்கு திசையை நோக்கி அமைந்துள்ள திருக்கோயிலில் மேற்கு திசையை நோக்கியவாறு முன்புற வாயிலும், கருவறையும் அமைந்துள்ளன.

கருவறை ரதவடிவில் அமைந்துள்ளது. ராஜகோபுரம் சிதைந்த நிலையில் உள்ளது. சுதைச் சிற்பங்களும், கற்சிலைகளும் பிற்காலச்சோழர்பாணியில் அமைந்துள்ளன. கோபுர வாயிலில் பாண்டியரின் மீன் இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளது. கருவறைக்கு எதிரிலுள்ள மகா மண்டபத்தில் அம்மன் சன்னதி அமைந்துள்ளது. இடதுபுறம் தட்சிணாமூர்த்தி சன்னதி அமைந்துள்ளது.

இறைவன் - சிதம்பரேஸ்வரர், (சிற்றம்பலநாதர்)

இறைவி - சிவகாமசுந்தரி.

திருநாவுக்கரசர் திருக்கரங்களால் உழவாரத் திருப்பணி செய்யப் பெற்ற தலம் (பண்ருட்டிக்கருகிலுள்ள) திருவதிகை வீரட்டானம் ஆலயம். அத்தலத்தை தன் கால்களால் மிதித்துச் செல்ல அஞ்சிய சுந்தரமூர்த்தி நாயனார் அருகிலுள்ள ஊரான சித்தவட மடத்தில் தங்கினார். இதனை சேக்கிழார்

**''உடைய அரசு உலகேத்தும்**
**உழவாரப் படையாளி**
**விடையவர்க்குக் கைத்தொண்டு**
**விரும்பும் பெரும்பதியை மிதித்து**
**அடையும் அதற்கு அஞ்சுவன்**
**என்று அந்நகரில் புகுதாதே**
**மடைவளர் தன்புறம்பே அணையினற்**
**சித்தவட மடம் புகுந்தார்''**
**(பெரிய - 82)**

என்று கூறுகிறார்.

சித்தவட மடத்தில் வீரட்டானத்து இறைவனுடைய பாதங்களையே இடையறாது சிந்தித்தவாறு உறங்கினார். அவருடன் சில அடியார் கூட்டமும் உறங்கினர். அவ்வாறு உறங்குகின்ற போது இறைவன் முதியவர் வடிவம் கொண்டு ஒருவரும் அறியாதவாறு அச்சித்தவட மடத்தினுள் புகுந்தார். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தலையின் மேலே தம் திருவடி படும்படியாக வைத்துத் தாமும் துயில் கொள்வாரைப் போலப் படுத்திருந்தார்.

சுந்தரர் விழித்து எழுந்தார். ''அருமறையோனே உன் அடிகளை என் தலைமேல் வைத்தனையே'' என்று கேட்டார். முதியவர் ''நீர் துயிலும் திசையை அறியாது காலை வைத்தது என் மூப்பினால் நேர்ந்தது'' என்றார். சுந்தரர் வேறு திசையில் தம் தலையை வைத்து உறங்க ஆரம்பித்தார். மீண்டும் அம்முதியவர் சுந்தரரின் தலையின் மேல் படும்படித் தம் திருவடிகளை நீட்டியருளினார். சுந்தரர் எழுந்து ''இவ்வாறு பல தடவை என்னை மிதிக்கும் நீர் யார்? என்று கோபமுடன் கேட்டார். முதியவராக வந்த இறைவர் ''என்னை இன்னும்

நீஅறிந்திலையோ,'' என்று கூறியவாறு மறைந்தருளினார்.

சேக்கிழார்இக்காட்சியை,

**"அங்கும் அவன் திருமுடிமேல்**
**மீட்டும் அவர்தாள் நீட்டச்**
**செங்கயல்பாய் தடம் புடைசூழ்**
**திருநாவலூர் ஆளி**
**இங்கென்னப் பலகாலும்**
**மிதித்தனை, நீயார்?'' என்னக்**
**கங்கை சடைக் கரந்தபிரான்**
**அறிந்திலையே எனக் கரத்தான்**
**(பெரிய - 87)**

அம்மொழியைக் கேட்ட சுந்தரர் திடுக்கிட்டார். அம்முதியவர் இறைவரே என்பதை உணர்ந்தார். என் முடியின் மீது திருவடியை வைத்தவர்சிவபெருமானே, என அறியாது போனேனே. இறுமாப்பு அடைந்து என்ன காரியம் செய்தேன் என்று எண்ணிப் பலவாறு வருந்தினார்.

உடனே, 'தம்மானை அறியாத சாதியர் உளரோ' எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடினார். இந்தப் பாடல் பிறந்த இடம் சித்தவடமடமாகும். அங்கிருந்தபடியே திருவதிகை வீரட்டானத்துள் எழுந்தருளியுள்ள பெருமானை வாழ்த்தி வணங்கித்துதித்துப் பரவசமடைந்தார்.

சிதம்பரத்திற்கு வடக்கே இத்தலம் அமைந்துள்ளதால் சித்தவடமடம் என்று இத்தலத்திற்கு பெயர் வழங்கப்பட்டது. மேலும் இங்கிருந்த மடத்தில் சித்தர்கள் நூற்றுக் கணக்கில் தங்கியிருந்ததாக வரலாறு கூறுகிறது.

மடத்திற்கு இப்பெயர் வழங்கப்பட்டதாலும், இம்மடம் அமைந்திருந்த ஊருக்கு 'கொட்டிளம்பாக்கம்' என்று வழங்கப்பட்டதாக திருவதிகைக் கல்வெட்டு மூலம் அறியப்படுகிறது. கொட்டிளம்பாக்கம் என்று வழங்கி வந்த இப்பகுதி தற்போது கோட்டலாம்பாக்கம் என்று வழங்கப்படுகிறது. இந்த ஊரைப் பற்றிய சில செய்திகள் திருவதிகை வீரட்டானேஸ்வரர் கோயிலில் இரண்டாம் குலோத்துங்கச் சோழனின் 12-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது.

கி.பி.9ஆம் நூற்றாண்டில் சுந்தரர் இம்மடத்திற்கு வந்து சென்ற பின்னர் அந்த இடத்தில் கோயில் கட்டப்பட்டுள்ளது.

கண்டராதித்த சோழர் காலத்தில் செங்கற்களால் கட்டப்பட்டிருந்த இக்கோயிலை கி.பி.13ஆம் நூற்றாண்டில் திருப்பணி செய்த கோப்பெருஞ்சிங்கக் காடவராயன் என்னும் மன்னன் இக்கோயில் கருவறையை கருங்கற்களால் மாற்றி அமைத்துத் திருப்பணி செய்த செய்தியை இத்தலத்திலுள்ள கல்வெட்டின் மூலம் அறிகிறோம்.

**குடமுழுக்கு**

சுந்தர மூர்த்தி நாயனார் இறைவனின் திருவடி தீட்சியை பெற்ற தலம் சித்தவடமடம்.

தீட்சைகள் பலவகைப்படும் அவற்றில் மூன்று முக்கியமானது. அவை ஸ்பரிஸ தீட்சை, நயன தீட்சை, திருவடி தீட்சைஎன்பவையாகும். சுந்தர மூர்த்தி சுவாமிகட்கு இங்குதான் திருவடி தீட்சைகிட்டியது. அத்தகைய சிறப்புடைய தலம் சித்தவடமடம் ஆகும்.



**அமைவிடம்**

கடலூர் மாவட்டம் பண்ணுருட்டிக்கு மேற்கே 3.கி.மீ. தொலைவிலும், திருவதிகையிலிருந்து 5கி.மீ தொலைவிலும் இத்திருத்தலம் அமைந்துள்ளது.

சித்தர்கள் வாழ்ந்ததும், சுந்தரமூர்த்தி நாயனார் வருகை புரிந்ததும், சுந்தரருக்கு இறைவனின் திருவடி தீட்சை அருளியதும் ஆகிய இத்தலத்திற்கு சென்று இறைவனை வணங்கித் திருவருளைப் பெறுவோம்.

# திருப்பாவை ஜீயர்

இந்திரா ஆராவமுதன்
ஸ்ரீரங்கம்

**வி**சிஷ்டாத்வைதத்தை நிறுவிய ஸ்ரீ இராமானுஜர் ஐந்து ஆசார்யர்களிடம் பாடம் பயின்றவர் என்பது எல்லாரும் அறிந்த ஒன்று.

நான்கு வேதத்திற்கு சமமான நான்கு பிரபந்தங்களை அருளிச் செய்த ஈன்ற தாயாக நம்மாழ்வார் இருந்தபோதிலும், அதை வளர்த்து பிரபலம் அடையச் செய்தபெருமை நம் இராமானுஜரையேதான் சாரும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் கிடையாது.

அவர் எல்லாவற்றிலும் கரைகண்டிருந்த போதிலும், அவர் மிகவும் ஈடுபாடு கொண்டு உகப்புடன் அனுசந்திக்கும் பிரபந்தம் ஆண்டாளின் திருப்பாவையாகும். **''பிஞ்சாய்ப் பழுத்தாள்''** என்ற அடைமொழியைப் பெற்ற ஆண்டாளின் திருப்பாவை என்கிற பிரபந்தம் ஆழ்வார்களின் அருளிச் செயலையும் விஞ்சி நிற்கக் கூடிய தன்மை கொண்டது என்பதுடன், அதில் அவர் அனவரதமும் ஆழங்கால் பட்டு இருந்ததால், ''திருப்பாவை ஜீயர்'' என்கிற பட்டமும் அவரைத் தேடி அடைந்து கௌரவப்பட்டது.

உடையவர் தம் குழாங்களுடன் ஸ்ரீரங்கத்தில் வீதிவலம் செய்யும் போது திருப்பாவைப் பாடல்களைப் பாடியபடியே வருவது வழக்கம். ஒரு சமயம் அவ்வாறு அவர் பாடி வரும் போது திருப்பாவையின் 18ம் பாடலான

**''உந்து மதகளிற்றன் ஓடாத தோள் வலியன்
நந்த கோபாலன் மருமகளே, நப்பின்னாய்!
கந்தம் கமழும் குழலீ கடைதிறவாய்
வந்து எங்கும் கோழி அழைத்தனகாண். மாதவிப்
பந்தர்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்
பந்தார் விரலி! உன் மைத்துனன் பேர் பாட
செந்தாமரைக் கையால் சீரார் வளையொலிப்ப
வந்து திறவாய் மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்''.**

என்ற பாடலைப் பாடி முடிப்பதற்கும், பெரிய நம்பியின் திருமாளிகையின் கதவைத் திறந்தபடி நம்பியின் மகளான அத்துழாய் வருவதற்கும் சரியாக இருந்தது அவளைப் பார்த்த உடையவர் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்கினார். கதவைத் திறந்தவுடன் இராமானுஜர் தன்னை நமஸ்கரித்ததைப் பார்த்த அத்துழாய் பதறிப்போய் உள்ளே ஓடித் தன் தந்தையிடம் விவரம் கூறினார். அதற்கு அவரோ சாவதானமாக ''உந்து மதகளிற்றன்'' பாசுரம் பாடலாகியதோ என்றபடியே விளக்கினார். ''சீரார் வளையொலிப்ப வந்து திறவாய்'' என்ற வரிகள் வருகிறதல்லவா, அதனால் உன்னையே நப்பின்னையாக உடையவர் பார்த்ததால்தான் இந்த நிலைமை ஏற்பட்டது என்றார். இராமானுஜர் இவ்வாறு பாடல்களில் மிகவும் லயித்துப் போய்விடுவார்.

**''நாறு நறும்பொழில்
மாலிருஞ்சோலை நம்பிக்கு, நான்
நூறு தடாவில் வெண்ணெய் வாய் நேர்ந்து
பராவி வைத்தேன்;
நூறு தடாநிறைந்த அக்கார
அடிசில் சொன்னேன்
ஏறுதிருவுடையான் இன்று வந்து
இவை கொள்ளுங்கொலோ''**

என்கிற ஆண்டாள் அருளிய நாச்சியார் திருமொழிப் பாசுரம் உடையவரின் நெஞ்சில் ஒரு அண்ணனின் பாசத்தை ஏற்படுத்தியது. விளைவு, ஆண்டாளின் நேர்த்திக் கடனை திருமாலிருஞ்சோலைப் பெருமாளுக்கு நிறைவேற்றிவிட்டு, ஸ்ரீவில்லிப்புத்தூரில் உள்ள ஆண்டாளைத் தரிசிக்கச் சென்றார்.

அப்போது அங்கு ஒரு அதிசயம் நடந்தது.

அர்ச்சாரூபத்தில் இருந்த ஆண்டாளே எழுந்துவந்து ''அண்ணா'' என்று கூறி வரவேற்றதாக பெரியோர் கூறுவர். இது எதைக்காட்டுகிறது என்றால், எத்தனையோ வருடங்களுக்குப் பின் பிறந்த இராமானுஜர் தம்பி ஸ்தானத்தில் இருந்த போதிலும் ஒரு அண்ணன் தன் தங்கைக்குச் செய்ய வேண்டிய சீர்வரிசைகளைப் போல செய்து முடித்ததைக் கண்டு பேரானந்தம் பெற்ற ஆண்டாள் முன்வந்து ''அண்ணா'' என்று அழைத்தது எத்தகைய பேறு என்ற வியப்பைத் தருகிறதல்லவா? இந்நிகழ்ச்சியின் மூலம் இராமானுஜரை கோயில் அண்ணன் என்று அழைக்க ஆரம்பித்தனர். அதற்கு முன்பே ஆதிகேசவப்பெருமாள், பூதபுரீசர் என்றும் திருவேங்கடமுடையான் தேசிகேந்திரர் என்றும், தேவாதிராஜன் யதிராஜர் என்றும், அரங்கன் உடையவர் என்றும், சாரதா ஸ்ரீபாஷ்யகாரர் என்றும், இராமானுஜருக்கு சூட்டிய பெயர்களை நாம் அறிவோம்.

எல்லாவற்றிற்கும் மேலாக அவரின் பிரதம சிஷ்யனான கூரத்தாழ்வான் அவரை நாராயணனுக்கு சமமாக ஒப்பிட்டு ''இராமானுஜேத்யேஷா சதுரா சதுரக்ஷரீ'' என்று கூறுகிறார். இதன் பொருள் நாராயணா என்கிற நான்கு எழுத்தைப் போன்று இராமானுஜர் என்கிற நான்கு அக்ஷரங்களைப் பின்பற்றினால் சரணாகதி ஏற்படும் என்று கூறுவதாக குருபரம்பரை மூலம் அறிய முடிகிறது.

திருப்பாவைப் பாடல்களுடன் திருப்பாவை ஜீயரான **இராமானுஜ** என்கிற நான்கு அக்ஷரத்தையும் நாம் ஜபித்து உய்வு பெறுவோம், வாரீர்.

# நூல் அறிமுகம்



## புகழ் பெற்ற இந்தியக் கோயில்கள்

காஷ்யபன் எழுதி வெளி வந்துள்ள இந்நூலில் புகழ் பெற்ற பிள்ளையார்பட்டி முதல் கொல்கத்தா வரை பன்னிரண்டு கோயில்களைப் பற்றிய எளிய இனிய சுவையான தகவல்கள் தொகுத்தளிக்கபட்டுள்ளன. கட்டுரைகளுக்கு ஜெபியின் கோட்டோவியங்கள் மிகுந்த வனப்பைத் தருகின்றன. உதவிக்குறிப்புகள் என்ற பெயரில் அளிக்கப்பட்டுள்ள குறிப்புகள் மிகுந்த பயன் தருபவையாக உள்ளன. 128 பக்கங்கள் கொண்ட இந்நூலின் விலை ரூ.65

## நாலாயிர திவ்யப்பிரபந்தம்




தங்கத்தாமரை பதிப்பகம், நாலாயிர திவ்யப்பிரபந்தத்தை இரண்டு பகுதிகளாக வெளியிட்டுள்ளது முதல் பாகம் 464 பக்கங்களும் இரண்டாம் பாகம் 368 பக்கங்களும் கொண்டது. படிப்பதற்கேற்ப பதங்கள் பிரித்து அச்சிட்டிருக்கின்றனர். இரண்டு பாகங்களும் சேர்ந்து விலை ரூ 225 மட்டுமே.

மேற்கண்ட நூல்களை வெளியிட்டோர் : தங்கத் தாமரை பதிப்பகம், 37, கால்வாய்க்கரைச் சாலை,கஸ்தூரிபா நகர், அடையாறு, சென்னை - 600 020. தொலைபேசி : 044 2441 4441

## பண்டெழுவர் தவத்துறை (லால்குடி)

திருச்சி மாவட்டத்திலுள்ள லால்குடி வைப்புத் தலமாகும். தேவாரத்துள் இது தவத்துறை என்று குறிக்கப்பட்டுள்ளது. அப்பர் சுவாமிகள் அருளிய ஆறாம் திருமுறையுள் இத்தலம் போற்றப்படுவதைக் காண்கிறோம். சேக்கிழார் பெருமான் அப்பர் சுவாமிகள் இத்தலத்து இறைவனை, இன்தமிழ் மாலை கொண்டு ஏந்தினார் என்று குறித்துள்ளார்.




இது சப்தரிஷிகள் பூசித்துப் பேறு பெற்ற தலம். இறைவி பெருந்திருவாட்டி. இத்தலத்தை அருணகிரிநாதர் முதலான அருளாளர்களும் அன்பர்களும் பாடிப் பரவியுள்ளனர். 768 செய்யுள்களும் பதினெட்டுச் சருக்கங்களும் கொண்ட புராண வரலாறும் உள்ளது.

இத்தலத்து இறைவி பெருந்திருப்பிராட்டி மீது பிள்ளைத் தமிழ் நூல் ஒன்றும் பாடப்பட்டுள்ளது.

இவ்வளவு நூல்களையும் ஒரே புத்தகத்தில் கொண்டு வரும் நோக்கில் திரு. வேத நாராயணன் அவர்கள் இந்நூலைப் படைத்துள்ளார். இவர் லண்டன் வாழ் தமிழர். லால்குடி மண்ணின் மைந்தர். லால்குடியைப் பற்றிய வீடியோ, ஆடியோ, கல்வெட்டுகள் பத்திரிக்கைச் செய்திகள் பலவற்றைக் கடும் முயற்சி செய்து சேர்த்துள்ளார். அவற்றை வகைப்படுத்தி அச்சிட்டுள்ளார்.


இந்த நூலின் ஒரு அங்கமாக லால்குடி பெரும்புலவர் ப. அரங்கசாமி அவர்கள் எழுதிய கவி எழில் சிந்தும் காவியத் துறை என்னும் நூல் இடம் பெற்றுள்ளது. தமிழ் அணங்கிற்கு வணக்கம் கூறுவதுடன் தொடங்கும் இந்நூல் நிகழ்காலச் செய்திகளை அதிக அளவில் பதிவு செய்துள்ளது. இதில் திருப்பணிகள் செய்தோர், கட்டளை நிறுவியவர்கள், திருவிழாக்கள், சிறுதெய்வ ஆலயங்கள், திருமடங்கள், இம்மண்ணில் தோன்றிய பெருமக்கள், தமிழறிஞர்கள், எழுத்தாளர்கள், சுற்றியுள்ள திருத்தலங்கள் என்று எல்லாவற்றையும் எளிய இனிய தமிழில் தொகுத்து அளித்துள்ளார். தமிழகத்திலுள்ள முக்கியமான ஊர்களுக்கு இத்தகைய பதிவு இருப்பது நலம்.

நூலின் பெயர் : பண்டெழுவர் தவத்துறை

ஆசிரியர் : ச. வேதநாராயணன், பக்கங்கள் : 216 + 6 , விலை : ரூ.50/-

நூல்கிடைக்குமிடம் : அருள்மிகு சப்தரிஷிசுவரர் ஆலயம், லால்குடி, திருச்சி மாவட்டம்.

# தை மாதத்தில் அரன் அருள் பெற்ற நாயன்மார்கள்



அப்பூதியடிகள் நாயனார் - தை - சதயம்



அரிவாட்டாய நாயனார் - தை - திருவாதிரை




கண்ணப்ப நாயனார் - தை - மிருகசீரிஷம்



கலிக்கம்ப நாயனார் - தை - ரேவதி



சண்டேஸ்வர நாயனார் - தை - உத்திரம்



திருநீலகண்ட நாயனார் - தை - விசாகம்

# கடலூர் - திருப்பாதிரிப்புலியூர் அருள்மிகு வரதராஜப் பெருமாள்

- பாச்சுடர் வளவ. துரையன்



எம்பெருமான் நாராயணன் அர்ச்சாவதாரமாகப் பல திருக்கோயில்களிலே எழுந்தருளி அருள் பாலிக்கின்றார். அத்தகைய சீர்மை பெற்ற திருக்கோயில்களில் கடலூர் திருப்பாதிரிப்புலியூரிலுள்ள வரதராஜப் பெருமாள் கோவிலும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இத்திருக்கோயில் கடலூர் நகர எல்லையில் அமைந்துள்ளது. கடலூர் பேருந்து மற்றும் இரயில் நிலையங்களிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. கடலூரிலிருந்து நடுநாட்டுத் திவ்யதேசங்களில் ஒன்றான திருவந்திபுரம் செல்லும் சாலையின் பக்கத்திலேயே இக்கோயில் அமைந்துள்ளது.

பெருமாள் கிழக்கு நோக்கிய திருமுக மண்டலத்துடன் நின்ற கோலத்தில் வரதராஜன் எனும் திருநாமத்தைத் தாங்கிக் காட்சி அளிக்கிறார். தாயாரின் திருநாமம் பெருந்தேவித்தாயார் என்பதாகும்.

ஆலயத்துள் நுழைந்ததுமே ஓங்கி உயர்ந்த துவஜஸ்தம்பமும் அதன் கீழே உள்ள பலிபீடமும் நம்மை வரவேற்கின்றன. நமக்கு இடப்புறமாக, எதிரே உள்ள இராமபிரானை நோக்கி, கைகூப்பிய நிலையில் ஆஞ்சநேயர் அருள்பாலிக்கிறார். இச்சன்னதியில் மிகப்பெரிய கீர்த்தியைக் கொண்ட அனுமன் சிறுவடிவம் தாங்கிக் காட்சி தருகிறார். ஆண்டு தோறும் இத்திருக்கோயிலில் நடைபெறும் உற்சவங்களில் அனுமத் ஜெயந்தியும் ஒன்றாகும்.


அந்த உற்சவத்திருநாளில் ஆஞ்சநேயருக்கு 10008 வடைமாலை சார்த்தப்படும் திருவைபவம் நடைபெறுகிறது. அன்று சொல்லின் செல்வனான அனுமன் சன்னதி முழுவதுமே வடைகளாகக் காட்சி அளிக்க நடுவில் இராமதூதன் நின்று அருள் பாலிப்பது கண்கொள்ளாக் காட்சியாகும்.

ஆஞ்சநேயர் சன்னதிக்கு நேர் எதிரே தெற்கு நோக்கியவாறு இராமபிரான் சன்னதி அமைந்துள்ளது. இங்கு எழுந்தருளி உள்ள

கோதண்டராமன் சக்தி வாய்ந்தவர் ஆவார்.

சீதா பிராட்டியோடும் இளைய பெருமாளோடும் அனுமன் உடன் இருக்க தென்னிலங்கையை வென்ற பிரான் காட்சிதருகிறார். ஒவ்வொரு மாதமும் புனர்பூசநட்சத்திரத்தில் வழிபாடும் பாசுரம் சேவித்தலும் நடைபெறுகின்றன. ஸ்ரீராமநவமியில் தொடங்கி ஜனன உற்சவமாக 11 நாள்கள் தொடர்ந்து உற்சவமும், தினந்தோறும் வீதி புறப்பாடும், இராமாயண சொற்பொழிவுகளும் நடைபெறுகின்றன. இத்திருக்கோயிலில் கொண்டாடப்படும் சீதா கல்யாண விழா மிகச்சிறப்பான ஒன்றாகும்.

மூலவரான வரதராஜப்பெருமாள் சன்னதிக்கு எதிரில் பெருமாளுக்கு எதிர் சேவையாகக் கூப்பிய கரங்களுடன் பெரிய திருவடி என்று பெயர் பெற்ற கருடாழ்வார் நின்று கொண்டு அருள்பாலிக்கிறார். கருடநதி எனப்படும் கெடில நதிக்கு மிக அருகில் அமைந்துள்ள இச்சன்னதி மிகவும் புகழ்பெற்றதாகும். ''கருட க்ஷேத்திரம்''





என்று கூறப்படும் அளவுக்கு இந்த ஆலயத்தில் கருட பஞ்சமி மற்றும் கருட ஜெயந்தியன்று வேதம் வல்லார்களைக் கொண்டு ஹோமம் வளர்த்து உற்சவம் நடத்தப்படுகிறது. ஒவ்வொரு வியாழக்கிழமை மாலையும் வேதபுருஷனான கருடனுக்குச் சிறப்பான வழிபாடு நடைபெற்று வருகிறது.

இத்திருக்கோயிலில் நமக்கெல்லாம் குமிழ் சிரிப்போடு, காட்சி தந்து அருள் பாலிக்கும் வரதராஜ பெருமாளைக் கண்டு வணங்கிக் கொண்டே இருக்கலாம் போன்று தோன்றும். இக்கோயிலில் ஆனி மாதம் பூரத்தில் தொடங்கி ஆனி சுவாதி வரை பிரம்மோற்சவம் நடைபெறுகிறது. அதில் தங்கக்கருட சேவை விசேஷமானதாகும்.

பெருமாளின் கருவறைக்கு இடப்புறம் சூடிக்கொடுத்த சுடர்க்கொடியான ஆண்டாள் நாச்சியாரின் சன்னதி அமைந்து உள்ளது. மார்கழி மாதம் முழுவதும் இங்கு திருப்பாவை சொற்பொழிவு நடைபெறுகிறது. அதுவும் கார்த்திகையின் கடைசி நாளிலேயே 'அவதாரிகை' என்று தொடங்கி திருப்பாவையின் மேன்மை பேசப்படுவது இங்குதான் நடைபெறுகிறது.



மூலவரை வணங்கி விட்டு வெளியில் வருவோமானால் பிரகாரத்தில் பெருமாள் சன்னதிக்கு வலப்புறமாகப் பெருந்தேவித் தாயார் சன்னதி தனியாக அமைந்துள்ளது. தாயார் அமர்ந்த திருக்கோலத்தில் அடியவர்களுக்கு வேண்டுவனவற்றை அள்ளிக் கொடுத்துக் கொண்டு அழகாகக் காட்சிதருகிறாள்.

தாயாருக்கு ஆடி மாத, தை மாத வெள்ளிக்கிழமைகளில் ஊஞ்சல் உற்சவம் நடைபெறுகிறது. மேலும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை மாலையும் கோயில் புறப்பாடு நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

பெருமாள் சன்னதியின் சுற்றுப்புறச் சுவர்களில் ஸ்ரீராதாகிருஷ்ணன், ஸ்ரீலட்சுமி ஹயக்ரீவர், ஸ்ரீலட்சுமி நரசிம்மர், ஸ்ரீலட்சுமி வராகர் ஆகியோரின் சிறுவடிவங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபாடு செய்யப்படுகிறது. ஒவ்வொரு சுவாதியிலும் நரசிம்மருக்கு மாலை வேளையில் நடக்கும் பூஜை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

தாயாரை வழிபட்டு வடக்கு நோக்கித் திரும்பி வருகையில் பெரிய திருமஞ்சன மண்டபம் உள்ளது.

மாசிமக உற்சவத்தின் போது திருக்கோயிலூர் உலகளந்த பெருமாள் கடலூரில் உள்ள கடற்கரைக்கு தீர்த்த வாரிகாண எழுந்தருள்வார். அச்சமயம் அப்பெருமாள் இச்சன்னதிக்கும் எழுந்தருளி அடியவர்களுக்கு அருள் பாலிப்பார். மேலும் இக்கோயில் திருக்கோயிலூர் உலகளந்த பெருமாளின் அபிமான ஸ்தலமாகும். திருக்கோயிலூர் பெருமாள் மாசி மகத்தீர்த்தவாரிக்கு மறுநாள் தங்க கருட வாகனத்திலும் இத்தலப் பெருமாள் சேஷ வாகனத்திலும் சேர்ந்து திருவீதி உலா வருவது கண்கொள்ளாக்காட்சியாகும்.

ஓங்கி உலகளந்த அப்பிரானுக்கு இம்மண்டபத்தில்தான் திருமஞ்சன நீராட்டு நடைபெறும். திருமஞ்சன மண்டபத்திற்கு எதிரே நீளமான பெரிய மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது இம்மண்டபத்தின் தென்புறம் வடக்கு நோக்கியவாறு விஷ்ணு துர்க்கை எழுந்தருளியுள்ளாள்.

இந்தப் பெரிய மண்டபத்தின் தூண்களில் பெரிய அளவில் அஷ்ட லட்சுமிகளும் எழுந்தருளி அருள்பாலிக்கிறார்கள். திருமஞ்சன மண்டபத்தின் இடப்புறம் தல விருட்சமான பலாமரமும் அதன் அடியில் துளசி மாடமும் உள்ளன.

அங்கிருந்து கிழக்கு நோக்கி வந்தால் மகா ஆசாரியரான மணவாள மாமுனிகள் சன்னதி அமைந்துள்ளது. ஒவ்வொரு மூலநட்சத்திரத்தன்றும் மணவாள மாமுனிகளுக்குச் சிறப்பான வழிபாடும் கோயில் புறப்பாடும் நடைபெறுகின்றன.

இத்தலத்தில் நாள் தோறும் பகல் 12 மணிக்குப் பெருமாளுக்கு உச்சிகால பூஜை நடைபெற்றபின் பக்தர்களுக்குத் தயிர் சாதம் வழங்கப்படுகிறது.

கடந்த பதினான்கு ஆண்டுகளாக இத்திருக்கோயிலில் வைணவ மாநாடு நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு வரும் வாழ்வில் ஒருமுறையேனும் இத்திருக்கோயிலுக்கு வந்து எம்பெருமாள் அருள்மிகு வரதராஜனின் அருளைபெறும் பாக்கியத்தைப் பெற வேண்டும்.



கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் அருள்மிகு கோணியம்மன் திருக்கோயிலின் இராஜகோபுர கட்டுமானப் பணியினை 15.11.2008 அன்று மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. கே ஆர். பெரியகருப்பன் அவர்கள் ஆய்வு செய்து அறிவுரைகள் வழங்கினார்.



இந்து சமய அறநிலையத்துறையில் செயல் அலுவலர்களாகப் பணியாற்றிட தேர்வு செய்யப்பட்டுள்ள 41 மூன்றாம் நிலை செயல் அலுவலர்களுக்கும், 12 நான்காம் நிலை செயல் அலுவலர்களுக்கும், பணி நியமன ஆணையினை மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. கே ஆர். பெரியகருப்பன் அவர்கள் 10.12.2008 அன்று வழங்கினார். உடன் இந்து சமய அறநிலையத்துறை முதன்மை செயலர் / ஆணையர் திரு. த. பிச்சாண்டி இ.ஆ.ப., அவர்களும், மகிழ்ச்சிப் பெருக்கில் செயல் அலுவலர்களும்.

# செல்வம் நல்கும் பழவேற்காடு சிந்தாமணீசுவரர்



எண்ணற்ற மகான்களும் மன்னர்களும் வழிபட்டுப் பேறுபெற்ற திருக்கோயில் பழவேற்காட்டில் அமைந்துள்ள கருங்காலி கிராமத்து கோவிலடித் தீவில் உள்ள சிந்தாமணீசுவரர் திருக்கோயிலாகும். புராண காலத்தோடு தொடர்புடைய கோயில் என்பது இதன் சிறப்பாகும். வட தமிழ்நாட்டின் உச்சியில் ஆந்திர எல்லையை ஒட்டி வங்கக் கடலோரம் அமைந்துள்ள இயற்கை எழில்வாய்ந்த ஊராகப் பழவேற்காடு திகழ்கிறது.

**இரணாசூரன்**

இரணாசூரன் என்பவர் இராவணனுடைய வம்சத்தில் தோன்றிய அசுரன். இவன் பலகாலம் தவம் செய்து ஆயிரம் சிங்கத்திற்கு இணையான பலம் பெற்றான். தொடர்ந்து வெற்றிகளையே கண்டுவந்த இவன் சென்னையை அடுத்த திருவொற்றியூருக்கு வடதிசையில் இரணாவூர் என்றொரு நகரை உருவாக்கி அங்கு கோட்டை கட்டி ஆட்சி புரிந்து வந்தான். தனது நிலையை மேலும் உயர்த்தும் நோக்கோடு இந்திரன் இல்லாத நேரம் பார்த்து இந்திரனின் குமாரனான சயந்தனுடன் போர் செய்து அங்கிருந்த அபூர்வ சிந்தாமணியைத் திருடிக் கொண்டு பூலோகம் வந்து சேர்ந்தான்.

சிந்தாமணியைக் காணாத இந்திரன் பிரம்மனிடம் கூற, பிரம்மன் நடந்தவற்றைத் தன் ஞான திருஷ்டியால் எடுத்துரைத்தார். உண்மையைத் தெரிந்து கொண்ட இந்திரன், இரணாவூருக்கு வந்து அசுரனுடன் போரிட்டான். நிலையைப் புரிந்து கொண்ட இரணாசூரன் சிந்தாமணியை விழுங்கிவிட்டு, இந்திரனின் சேனைகளையெல்லாம் வெட்டியெறிந்தான். எனினும், இந்திரன் தனது அஸ்திரத்தினால் அசுரனைத் தனிமைப் படுத்தினான். அவன் இந்திரனைக் கொல்லக் கத்தியைத் தூக்கிய போது, இந்திரன் அவன் உடலை வெட்டி வீழ்த்தினான். அப்போது சிந்தாமணி வெளிப்பட்டது. இந்திரனின் கத்தி விழுந்த இடமே இன்று 'கத்திவாக்கம்' என்றழைக்கப்படுகிறது. அவ்வேளையில் விண்ணுலகு வரை புழுதி பறந்த இடம் 'புழுதிவாக்கம்' என்றழைக்கப்படுகிறது.

அசுரனை அழித்ததால் இந்திரனுக்கு தோஷம் உண்டாயிற்று. இதனால், பிரம்மனுடன் திருவொற்றியூர் சென்று துருவாச முனிவரை அடைந்து தன் துன்பத்திற்குப் பரிகாரம் வேண்டினார். அவர், கிழக்குக் கடற்கரையில் ஆரணி நதிக்கும் திருவொற்றியூருக்கும் இடையே திருப்பாலைவனத்திற்குத் தென்கிழக்கே சிவலிங்கத்தை நிறுவி, பூசைசெய்து வந்தால் தொல்லை நீங்கும் என்றார். அந்த இடத்தைத் தேடிச் செல்கையில், ஒரு பிராமணர் உருவில் வந்த செல்வ விநாயகர் அந்த இடத்தைக் காட்டிவிட்டு மறைந்தார். பிள்ளையார் காட்டிய இடம் 'காட்டுப்பள்ளி' என்று அழைக்கப்படுகிறது. இதை உணர்ந்த பிரம்மனும் முதலில் செல்வ விநாயகரை நிறுவி, சிவகாமிவல்லி உடனுறை சிந்தாமணீசுவரரை நிறுவி, அதனருகே ஒரு திருக்குளத்தையும் உண்டாக்கினான். பல நாட்கள் அங்கு தங்கி பூசைசெய்து வந்தான். பூசையை ஏற்ற இறைவன், இந்திரனுக்குக் காட்சி தந்தார். அவரின் ஆணைப்படி அந்த இடம் கோயிலடி என்றும், இறைவன் சிந்தாமணிநாதர் என்றும், தீர்த்தம் இந்திர தீர்த்தம் என்றும் அழைக்கப்படுகிறது.

மேலும், இங்கு ஓர் அடியார்க்கு அன்னமிட்டால் அது ஆயிரம் அடியார்க்கு அன்னமிட்ட பலனைத் தரும் என்றும், தீராத நோய்கள் அனைத்தும் தீர்க்கும் தலமாகவும், துர்தேவதைகளால் உண்டாகும் துன்பத்தை நீக்கும் தலமாகவும், இத்தலம் விளங்குமென்று இறைவன் அருளினார்.

இதன்பின்னர், இந்திரன் தன் வழிபாட்டை நிறைவு செய்து தோஷம் நீங்கி புதிய பொலிவுடன் இந்திர லோகம் சென்றான்.

**துருவாசமுனிவர்**

கங்கை நதிக்கரையில் உள்ள காசி விசுவநாதர் ஆலயத்தை தரிசித்த துருவாசமுனிவருக்கு இறைவன் திருவடியில் இருந்து செண்பக மலர் ஒன்று பிரசாதமாகக் கிடைத்தது. அந்த செண்பக மலரைத் தகுதியில்லாத ஒருவருக்கு கொடுத்ததால், முனிவருக்குப் பழி உண்டானது. அதற்குப் பிராயச்சித்தமாய் மார்க்கண்டேயரின் அறிவுரைக்கிணங்க, சிந்தாமணிநாதர் ஆலயத்திற்கு வந்து அங்கே செண்பகத் தோட்டம் அமைத்து, தன் பெயராலேயே ஒரு தீர்த்தமும் அமைத்து, ருத்திராட்சம் அணிந்து, தினந்தோறும் செண்பக மலரைச் சிந்தாமணி நாதருக்குச் சூட்டி வந்தார். அவரது பூசையால் மகிழ்ந்த இறைவன், அவருக்கு அருள் வழங்கிப் பழி நீக்கி பேறுதந்தார்.

**கருடன்**

கருடனுக்கும் நந்திக்கும் ஏற்பட்ட வாக்குவாதத்தில் நந்தியை ஏளனம் செய்ததால் கருடனுக்கு குற்றம் ஏற்பட்டது. அதை நீக்க விஷ்ணுவின் அறிவுரைக்கிணங்க, சிந்தாமணித் தலம் வந்த கருடன், இங்கே ஒரு தீர்த்தம் உண்டாக்கி தினமும் இறைவனைப் பூசித்து வந்தான். அதனால் தோஷம் நீங்கியது மகிழ்வுடன் கருடன் வைகுண்டம் போய்ச்சேர்ந்தான்.


**தொண்டைமான்**

காஞ்சி மாநகரைத் தலைநகராகக் கொண்டு அரசாண்டு வந்த தொண்டைமானுக்குக் குழந்தை பாக்கியம் இல்லை. இதற்கு வழி வேண்டி தன் அவைப் பெரியோர்களிடம் ஆலோசித்தான். அதன்படியே தனது அரசை அமைச்சரிடம் ஒப்படைத்துவிட்டு, சிவாலய தரிசனத்திற்கு தன் மனைவியுடன் புறப்பட்டான். பல தலங்களைத் தரிசித்து முடித்த நிலையில் பழவேற்காட்டில் தங்கிய மன்னனுக்கு ஒரு கனவு தோன்றியது. இப்பகுதியில் எழுந்தருளியுள்ள சிந்தாமணீசுவரருக்கு திருப்பணி செய்தால் குழந்தை பாக்கியம் உண்டாகும் என கனவு மூலம் தெரிய வந்தது. அதன்படியே அவன் திருப்பணி செய்து பூஜைகள் நடக்க ஏற்பாடு செய்து வழிபட்டு வந்தான். மன்னனுக்கு குழந்தைபாக்கியம் கிடைத்தது.

**சங்குக்கன்னன்**

மாளவ தேசத்துக் காட்டில் சங்குக்கன்னன் என்ற ஒரு வேடன் கொலை, கொள்ளையில் ஈடுபட்டு, தொடர்ந்து கொடிய பாவங்களைச் செய்து வந்தான். இது மட்டுமன்றி, சிவனடியார் கோலம் பூண்டு அடியார்களிடமும் கொள்ளையடித்து வந்தான். இதன் உச்சக் கட்டமாக சிந்தாமணீசுவரர் ஆலயம் வந்த இவன், ஒரு நாள் நள்ளிரவில் ஆலயத்திலிருந்த நகைகளையெல்லாம் மூட்டை கட்டிக் கொண்டு மதிலேறி வெளியே குதிக்க, அவன் கண் பார்வை பறிபோனது. இதன்பின் வழிதெரியாது தடவிக் கொண்டே வெளியே போக முற்பட்டான். அங்கிருந்த இந்திரத் தீர்த்தத்தில் தவறி விழுந்து விட்டான். வெளியே எழுந்து வந்த அவன், கண்கள் பளிச்சென்று தெரியத் தொடங்கியது. தன் தவறையெல்லாம் உணர்ந்த அவன், பழையபடி நகைகளை ஆலயத்தில் வைத்துவிட்டு, அத்தலத்திலேயே தங்கி தவறான வழியில் சம்பாதித்த அத்தனை





பொருட்களையும் சிந்தாமணீசுவரருக்கு தானமாகக் கொடுத்துப் பல்வேறு திருப்பணிகளை மேற்கொண்டு இறுதியில் சிவப்பேறு அடைந்தான்.

**நிருதி**

இவர் சிந்தாமணி நாதரை வழிபட்டு ருத்திராட்சத்தின் அருமை பெருமைகளை உலகிற்கு உணர்த்தி, சிவப்பேறு பெற்றார்.

**ஆலய அமைப்பு**

சிதிலமடைந்து கிடந்த இவ்வாலயத்தில் சிறப்பான முறையில் திருப்பணி மேற்கொள்ளப்பட்டு, கடந்த ஆகஸ்டு 2002ல் குடமுழுக்கு விழா நடைபெற்றது. ஆலயத்தின் உட்புறம் வெகு நேர்த்தியாக அமைக்கப்பட்டுள்ளது.

இறைவன் ஆலயம் கிழக்கு முகமாய் வங்கக் கடலை நோக்கி அமைந்துள்ளது. பின்புறமும் இடது புறமும் பக்கிங்காம் கால்வாய் நீரால் சூழப்பட்டுள்ளது. ஆலயத்தின் எதிரே நந்தி மண்டபத்தில் நந்திதேவர் இறைவனை வணங்கிய கோலத்தில் காட்சி தருகிறார். அவருக்கு அருகே இந்திர தீர்த்தம் (கிணறு) உள்ளது. அதனருகே பழைய தெய்வ வடிவங்கள் சிறு கோயிலில் அமைந்துள்ளது. அதன் நேரெதிரில் பண்டார சுவாமிகள் என்னும் சித்தரின் ஜீவ சமாதி உள்ளது. இவரைத் தாத்தா சுவாமிகள் என்று இப்பகுதி மக்கள் அன்போடு அழைக்கின்றனர்.

ஆலயத்திற்குக் கிழக்கு மற்றும் தெற்கு வாசல் உள்ளது. கிழக்கு வாசல் வழியே நுழைந்ததும், சுவாமி கருவறையின் எதிரே சூரிய சந்திரர்கள் காட்சி தருகின்றனர். தென்மேற்கு மூலையில் சிந்தாமணி விநாயகர் மற்றும் வடமேற்கு மூலையில் முருகர் சந்நிதிகளும் அமைந்துள்ளன. கருவறைக்கோட்ட தெய்வங்களாக கணபதி, தட்சிணாமூர்த்தி, லிங்கோற்பவர், பிரம்மா, துர்க்கையும் எதிரே சண்டிகேசுவரர் சந்நிதியும் அமைந்துள்ளன. வலதுபுறம் சிவகாமியம்மையின் சிறு சந்நிதி தெற்கு நோக்கியவாறு அமைந்துள்ளது. அன்னை அழகுடன் அருளை வழங்கியவாறு நின்ற கோலத்தில் காட்சி தருகிறாள்.

**கல்வெட்டுகள்**

கி.பி.1933-34 ஆண்டு தொல்லியல் ஆய்வறிக்கையின் மூலம் இவ்வாலயத்தில் நான்கு கல்வெட்டுகள் இருப்பதை அறிகிறோம். இராஷ்டிரகூட கன்னரதேவன் (கி.பி.965), இரண்டாம் சுந்தர சோழன் (கி.பி.973) மற்றும் பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த வேறு இரண்டு கல்வெட்டுகளும் இத்தலத்தின் சிறப்புகளைக் கூறுகின்றன.

பாண்டிய நாட்டு கோட்டாறு பகுதியைச் (நாகர் கோயில்) சேர்ந்த பட்டாலகன் என்பவன் திருப்பகவன்துறை இறைவனை மீண்டும் பிரதிஷ்டை செய்துள்ளான். இப்பகவன் துறையானது 'மேற்கடல் கோகர்ண சமாநமாகிய கீழ்க்கடல் தீர்த்தமாந திருப்பகவன்துறை' எனக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பட்டாலகன் ஆரணி ஆற்றங்கரையில் வழிபாட்டிற்கென நிலங்கள் வாங்கித் தந்துள்ளான். இதே போல இளநிரவி (வணிகர் குழு) சதுர்வேதி மங்கலத்துச் சபையாரிடமும் நிலங்கள் வாங்கப்பட்டுள்ளன. விஜயநகர மன்னர் காலத்தில் அனந்தராயன் பட்டணமான பழவேற்காடு என்று இவ்வூர் அழைக்கப்படுகிறது. இப்பழவேற்காட்டில் சீனக் கப்பல்கள் மூலம் துணி மற்றும் சரக்குகள் ஏற்றுமதியாயின. இதேபோல டச்சுக்காரர்களும் இங்கு வணிகம் செய்துள்ளனர். இதே போல, பழவேற்காடு ஆதி நாராயணசாமி கோயிலில் காணப்படும் கி.பி.16ஆம் நூற்றாண்டு தெலுங்குக் கல்வெட்டில் இவ்வூர் பிரளயக் காவேரி என்றும், மல்லப்பட்டணம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பழைய+வேல் + காடு என்பது பழவேற்காடு ஆனது. வேல மரங்கள் நிறைந்த காடு என்பது இதன் பொருள்.

ஐரோப்பியர்கள் பழவேற்காடு என்ற பெயரை உச்சரிக்க முடியாததால் பழவேற்காடு என்பதை ''புலிகாட்'' ஆக்க அதுவே இன்று ஆங்கிலப்பெயராக நிலைத்துவிட்டது.

### ஆலய தரிசன நேரம்

இந்த ஆலயத்தில் ஒரு கால பூஜை மட்டுமே நடைபெறுகிறது. அதனால், காலை 9 மணி முதல் 11 மணி வரை மட்டுமே இந்த ஆலயம் திறந்திருக்கும். அமாவாசை, பௌர்ணமி நாட்களில் கூடுதலாக ஒரு மணி நேரம் திறந்திருக்கும். பிரதோஷ காலங்களில் மாலை 3 மணி முதல் 5 1/2 மணி வரை ஆலயம் திறந்திருக்கும்.

### அமைவிடம்

இக்கோயில் திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டத்தில் பழவேற்காட்டில் பக்கிங்காம் கால்வாயும் வங்கக் கடலும் சந்திக்கும் முகத்துவாரப் பகுதியில் நாற்புறமும் நீர் சூழ, கருங்காலி கிராமத்தில், சுமார் 25 ஏக்கர் பரப்பளவு கொண்ட மணல் திட்டில் 3 சென்ட் இடத்தில் இயற்கை எழிலுடன் அமைந்துள்ளது. பழவேற்காடு வர விரும்புவோருக்கு நெற்குன்றத்திலிருந்தும் பொன்னேரியிலிருந்தும் ஏராளமான பேருந்து வசதி உண்டு. கோயம்பேட்டிலிருந்தும் நேரடியாகச் செல்ல பேருந்து வசதி உண்டு. சென்னையிலிருந்து சுமார் 50 கிலோமீட்டர் தொலைவில் இக்கோயில் அமைந்துள்ளது.

சாலை வழியே வர விரும்புவோர் சென்னை சென்ட்ரல் - கும்மிடிப்பூண்டி வழித்தடத்தில் அத்திப்பட்டு புறநகர் இரயில் நிலையத்தில் இறங்கி, அங்கிருந்து ஆட்டோ மூலம் சுமார் 11 கிலோ மீட்டர் தொலைவில் எண்ணூர் துறைமுகம் காட்டுப்பள்ளி வழியாக கருங்காலி கிராமத்தில் உள்ள கோவிலடி சிந்தாமணீசுவர் ஆலயம் வரலாம். இதே போல, மீஞ்சூரிலிருந்து காட்டூர் வழியாக வரும்போது பக்கிங்காம் கால்வாய் வரை வர வேண்டும் அக்கரையிலிருந்து படகு மூலம் மறுமுனையில் உள்ள சிந்தாமணீசுவரர் ஆலயத்தை அடையலாம்.

மற்றொரு வழியாக படகுமூலம் வர விரும்புவோர் சாட்டான்குப்பம் அல்லது பழவேற்காடு படகுத் துறையிலிருந்து 5 கிலோ மீட்டர் தெற்கே படகு மூலம் பயணம் சென்று வரலாம்.

### பழவேற்காடு ஆலயங்கள்

இவ்வூரில் பிரம்மாண்ட அமைப்பில் ஆனந்தவல்லி உடனுறை சோமாசுவர சுவாமி திருக்கோயில் அமைந்துள்ளது. இது விஜயநகர மன்னர் காலத்தில் கட்டப்பட்டதாகும். இக்கோயிலில் பல்வேறு சிற்ப வேலைப்பாடுகள் உள்ளன. இங்குள்ள இராமாயணக் கதை, மனுவின் கதை மற்றும் அனுமனின் பல்வேறு உருவங்களும் நம் கண்களுக்கு விருந்தளிக்கின்றன.

இதேபோல கி.பி. 16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஆதி நாராயணர் கோயிலும் மிகப் பிரம்மாண்டமாய் அமைந்துள்ளது. தாயார் பெயர் பங்கஜவல்லி ஆகும். கல்வெட்டு, சிற்பம், கட்டக்கலை மூன்றிலும் சிறப்புப் பெற்ற இக்கோயில், பாலவந்தகுலு என்பவரால் கட்டப்பட்டதாகும்.

கி.பி. 1896ல் உருவாக்கப்பட்ட சுப்பிரமணியர் கோயில் வெகு நேர்த்தியாகக் கட்டப்பட்டுள்ளது. இதில் முருகப் பெருமானின் அங்கங்களில் அமைந்துள்ள சக்திகள் வண்ண ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது வேறெங்கும் காண முடியாத அரிய படைப்பாகும்.

எடமணி கிராமத்தில் பனை மரத்தின் அடிப்பகுதியே மூலவராகக் கொண்ட அருள்மிகு கரிமணல் அங்காள பரமேசுவரி உடனுறை சடையராய ஈசுவரர் திருக்கோயில் எளிய வடிவில் நேர்த்தியாக அமைக்கப்பட்டுள்ளது. ஸ்ரீஹரிகோட்டா பகுதியில் அமைந்திருந்த இத்தலம் அங்கே ஆய்வு மையம் அமைந்ததையொட்டி தற்போது இங்கே எழுப்பட்டுள்ளது. இவ்வாலயம் குழந்தைப் பேறு அளிக்கும் கண்கண்ட தெய்வ தலமெனக் கூறப்படுகிறது.

அந்நிய தேசத்தவரின் நேசமிகு இடமாகத் திகழ்ந்த பழவேற்காடு, ஆலயங்கள் நிறைந்த ஆன்மிக பூமியாகவும், பறவைகளின் சொர்க்க பூமியாகவும், பயணிகளின் சுற்றுலாத் தலமாகவும் மீனவர்களின் தாய் மண்ணாகவும் இருக்கின்றது.

சிறுசிறு தீவுகளைக் கொண்டு இயற்கை எழிலுடன் காட்சி தருவதால் அனைத்து தரப்பினரும் நாள் முழுவதும் சுற்றிப் பார்க்க ஏற்ற இடமாகத் திகழ்கிறது.

- பனையபுரம் அதியமான்

# வினை விதைத்தவன் வினையறுப்பான்

இரவு 12 மணி, எங்கும் நிசப்தம். ''உன் தம்பியை விரட்டியடி'' என்றாள் காளியம்மாள் தன் கணவரிடம்.

மறுநாள் காலை, ''அடேய்! தம்பீ! அப்பா தனியாகப் போய்விடு; இனி உன்னை வைத்துக் கொண்டிருக்க என்னால் ஆகாது'' என்றான் குப்புசாமி,

''நல்லது, அண்ணா!''

''தம்பி இங்கே வா நமக்குப் பாகப்பிரிவினை செய்ய ஒரு பயலும் வரப்படாது. நான் தெய்வத்துக்கு உகந்த மாதிரி ஒரே வஞ்சனையில்லாமல் செஞ்சுடறேன்.

''புல்லு வீடு உனக்கு, ஓட்டு வில்லை வீடு எனக்கு, புன்செய் நிலம் உனக்கு, நன்செய் நிலம் எனக்கு நன்செய் நிலத்துக்கு அதிகமாகச் சத்துப் போட வேணும். உனக்கு அந்தக் கஷ்டம்கூடாது என்று தான் புன்செய் நிலம் உனக்குக் கொடுத்தேன். கறவை மாடு எனக்கு இருக்கட்டும். மலட்டு மாடு உனக்கு. நான் எதுவும் நியாயமாகத்தான் செய்வேன். மலட்டுமாடு என்றால் தீவனம் அதிகம் வைக்க வேண்டியதில்லை. பித்தளை ஏனங்கள் சதா தேய்க்க வேண்டும். ஆதலால் அவைகள் எனக்கு இருக்கட்டும். இந்தா, இந்த மண் ஏனங்களை நீ எடுத்துக் கொள்'' என்று கூறினான்.

சுப்பன் அண்ணனுடன் தகராறு செய்து கொள்ள அஞ்சி, அண்ணன் சொன்னபடி புல்வீட்டில் குடியேறினான். மண் ஏனங்களை வைத்துக் கொண்டு நிம்மதியாகக்காலம் கழித்தான்.

சுப்பன் மனைவிக்கு மிகவும் வருத்தம். ''அண்ணன் அதிகம் வஞ்சனை செய்து விட்டானே? நீஏன் சும்மா இருக்கே? நீயும் அண்ணனும் ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகள் தானே. அண்ணனுக்கு ஓட்டுவில்லை வீடு. உனக்குப் புல்வீடு. அண்ணனுக்கு நன்செய் நிலம், உனக்குப்புன்செய் நிலம். அண்ணனுக்கு கறவைமாடு, உனக்கு மலட்டு மாடு, அண்ணனுக்குப் பித்தளை ஏனம், உனக்கு மண் ஏனம். இது முறையா? இது தருமமா? என்றாள்.

சுப்பன், ''பெண்ணே! சும்மா இரு. ஒருவர் கொடுத்து ஒருவர் வாழ்ந்து விட முடியாது. தெய்வம் கொடுத்து வாழ வேண்டும். முருகன் கொடுத்து வாழ வேண்டும். முருகன் நம் பக்கம் இருக்கிறார்''! என்றான்.

சுப்பனுடைய மலட்டு மாடு குப்புசாமியின் வைக்கோலைத் தின்று விட்டது.

குப்புசாமி அரிவாளால் சுப்பனுடைய மாட்டை வெட்டிவிட்டான். சுப்பன் ஒன்றும் பேசவில்லை. அதை உரித்துத் தோலை எடுத்து, ஒரு டமாரம் செய்யச் செய்தான் அடுத்த நகரத்தில் கோயிலுக்கு விற்றால் நல்ல பணம் வரும் என்று கேள்விப்பட்டு சுப்பன் அதனை எடுத்துக் கொண்டு புறப்பட்டான். பொழுது போய்விட்டது. நள்ளிருள். ஓர் ஆலமரத்தின் மீது ஏறி டமாரத்துடன் சுப்பன் அமர்ந்து கொண்டு முருகன் திருநாமத்தை உச்சரித்துக் கொண்டிருந்தான்.



திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்

இரவிலே களவு செய்கிற கள்ளர்கள் அந்த மரத்தின் கீழே வந்து உட்கார்ந்துதான் பங்கிட்டுக் கொள்வது வழக்கம். அன்றிரவு மன்னனுடைய அரண்மனையில் பொன்னும் மணியும் திருடிக்கொண்டுவந்து ஆலமரத்தின் கீழே வைத்து அமர்ந்தார்கள். கள்வர்களைக் கண்டவுடன் சுப்பனுக்கு உடம்பு நடுங்கியது. நாடி நரம்பு ஒடுங்கியது. மடியில் வைத்திருந்த டமாரம் நழுவியது. அது கிளைகளில் பட்டு டம்-டும் என்ற ஓசைஎழுந்தது.

தம்மைப் பிடிக்க அரசசேவகர்கள் வருகிறார்கள் என்று கருதிய கள்வர்கள் அஞ்சி, மூட்டைகளை வைத்து விட்டு மூலைக்கு ஒருவராக ஓடினார்கள்.

சுப்பன் மெல்ல மரத்தை விட்டு இறங்கிப் பார்த்தான். டமாரம் கிழியவில்லை.

மூட்டைகளையும் பார்த்தான். முருகன் தந்த பிரசாதம் என்று கருதி அந்த மூட்டைகளைத் தலை மீது வைத்துக் கொண்டு 'முருகா முருகா' என்று நாமஜபம் செய்து கொண்டே வீட்டுக்கு வந்து சேர்ந்தான்.

சுப்பன் சிறிது தங்கத்தையும் மணியையும் எடுத்துக் கொண்டு, மிகுதியை நிலத்தினுள் புதைத்து வைத்துக் கொண்டான். சுப்பன் மனைவி, அணிகலன்களுடன் உலாவுவதைக் கண்ட காளியம்மாள் பொறாமையால் வெதும்பினாள். கணவரிடம், ''உன் தம்பி மனைவி பொன் காய்ச்சிப் புளியமரம் போல் உலாவுகிறாளே! நீயும் ஆண் பிள்ளைதானே எழுந்து போ. பொன்னும் மணியும் கொண்டு வா. அவளுக்கு எதிரில் நானும் அதே மாதிரி நகைபோட்டுக் கொண்டு உலாவ வேணும்'' என்று இடி முழக்கம் செய்தாள்.

குப்புசாமி சுப்பனிடம் வந்து, ''அடேய், தம்பி ஏது உனக்கு இத்தனை நகைகள்? உள்ளதைச்சொல்'' என்றான்.

''அண்ணா! அதைக் கேட்க வேண்டாம். இந்தா நகைகளைத் தருகிறேன். கொண்டு போய் அண்ணியிடம் கொடு. போதுமென்ற மனம் சாந்தியைத் தரும், சூதும் வாதும், வேதனையைத் தரும்'' என்றான்.

''சின்னப் பயலே! நீகொடுத்து நான் வாங்குவதா? உள்ளதைச் சொல், இல்லையேல் உன்மாட்டை வெட்டியது போல் உன்னையும் வெட்டுவேன்'' என்றான் குப்புசாமி.

சுப்பன் தான், டமாரம் செய்ததையும் இரவில் நடந்த நிகழ்ச்சியையும் விவ்ரமாகக் கூறினான்.

குப்புசாமி உடனே அரிவாளை எடுத்துக் கொண்டு போய் கன்று ஈனுகின்ற பசுவை வெட்டினான். தோலை உரித்தான். டமாரம் செய்தான். அன்றிரவு அதனை எடுத்துக் கொண்டு போய் வழி நடந்து, தம்பி குறிப்பிட்ட ஆலமரத்தின் மீது ஏறி அமர்ந்து கொண்டான்.

அன்றிரவும் கள்வர்கள் எங்கோ திருடிக்கொண்டு வந்து ஆலமரத்தின் கீழே அமர்ந்தார்கள். குப்புசாமி டமாரத்தை அடித்தான்.

கள்வர்கள், ''அன்று நாம் வீணே அவசரப்பட்டு ஓடி ஏமாந்து போனோம். சத்தம் தலைக்கு மேல் கேட்கிறது. யாரும் ஓடாதீர்கள்'' என்று கூறி, சிக்கி முக்கியடித்துத் தீவட்டி ஏற்றிப் பார்த்தார்கள். மேலே குப்புசாமியைக் கண்டு. ''அடேய்! தடிப்பயலே! நீதானே அன்றும் எங்களை ஏமாற்றினாய்? இறங்கிவா'' என்று கர்ஜித்தார்கள்.

குப்புசாமியின் சப்தநாடியும் ஒடுங்கிவிட்டது. நெஞ்சு படபட என்று அடித்துக் கொண்டது, இறங்கி வந்த அவனைக் கள்வர்கள் கீழே தள்ளி நையப் புடைத்தார்கள். குடுமியைக் கத்தரித்தார்கள். டமாரத்தைப் பிடுங்கிக் கொண்டு ''மடையா! நாங்கள் உயிருக்குத் துணிந்து எங்கோ, களவாடிக் கொண்டு வந்தால், நீகள்ளனுக்குக் கள்ளனாய் எங்களிடமே திருடுகிறாயே?'' என்று வைது விரட்டியடித்தார்கள்.

மிகுந்த ஆத்திரத்துடன் வந்த குப்புசாமி தம்பியின் புல்வீட்டில் தீ வைத்து விட்டான், சுப்பனும் அவன் மனைவியும் வெளியே வந்து ''முருகா முருகா!'' என்று கூறி நாம பஜனை செய்தார்கள். தண்ணீரை விட்டு அணைத்தார்கள்.

பொழுது விடிந்தது, எரிந்த கரிகளை ஒன்று கூட்டி ஒரு கோணிப்பையில் போட்டு மூட்டை கட்டிக்கொண்டு தலையிலே சுமந்து கொண்டு சுப்பன் அடுத்த நகரத்திலே விற்பதற்காகப் புறப்பட்டுச் சென்றான். வழியில் பொதிமாட்டின் மீது முத்து மூட்டைகளை ஏற்றிக் கொண்டு சில வியாபாரிகள் வந்தார்கள்.

''ஐயா! இங்கே தண்ணீர் எங்கிருக்கிறது?'' என்று சுப்பனைக் கேட்டார்கள். அவன் இவர்களை அழைத்துக் கொண்டு போய் ஆற்றைக் காட்டினான். வியாபாரிகள் முத்து மூட்டைகளை இறக்கி வைத்து விட்டு மாடுகளைக் குளிப்பாட்டித் தண்ணீர் காட்டினார்கள். முத்து மூட்டைகளின் பக்கம் கரிமூட்டையை வைத்து விட்டு, சுப்பன் நீராடி, முருகநாமம் ஜபித்துக் கொண்டிருந்தான்.

முத்து வியாபாரிகள் குளித்து, கட்டமுது உண்டு முத்து மூட்டைகளைப் பொதிமாட்டின் மீது ஏற்றும் போது முத்து மூட்டை ஒன்றை விடுத்து, அதற்கு மாறாக கரி மூட்டையை ஏற்றிக் கொண்டு போனார்கள். கவனக் குறைவால் நிகழ்ந்த இந்த நிகழ்ச்சியைச் சுப்பன் அறியமாட்டான். ஜபதபம் செய்துவிட்டுத் தன் கரிமூட்டையைத் தூக்கி நடந்தான். கனமாக இருந்தது. மெல்ல அவிழ்த்துப் பார்த்தான். முத்துக்கள்! அந்தோ! வியாபாரிகள் தெரியாமல் மூட்டையை மாற்றி எடுத்தார்கள் போலும், என்று எண்ணிவருந்தினான். அவர்கள் நெடுந்தூரம் போய்விட்டபடியால் அவர்களைத் தொடர்ந்து போய்த் தரமுடியாத நிலைக்கு இரங்கினான். வீட்டுக்குக் கொண்டுவந்து சில முத்துக்களைக் கோத்து மனைவிக்கு அணிவித்தான். மற்ற முத்துக்களைப் பாதுகாப்பான இடத்தில் வைத்தான்.

இளையவள் முத்துமாலையுடன் உலாவுவதைக் கண்டாள் காளியம்மாள். உண்மையிலேயே காளியாக ஆனாள். குப்புசாமியைப் பார்த்து ஆடினாள், பாடினாள், ''நீயும் ஒரு மனிதன் தானோ? அதோ பார், அந்த அசட்டுப் பொம்பளை முத்து மாலை போட்டுக் கொண்டு குலுக்குகிறாள். நீபோய் முத்து மாலை கொண்டுவா'' என்று அவனை வாட்டிவதைத்தாள்.

குப்புசாமி தம்பியிடம் வந்து, ''அடேய், ஏது முத்து மாலை?'' என்று கேட்டான். ''அண்ணா! இந்தா இந்த முத்துமாலையைக் கொண்டுபோய் அண்ணியிடம் கொடு'' என்று மாலையை நீட்டினான். அவன் வாங்க மறுத்து வந்த வழியைக் கேட்டான். நடந்ததைக் கூறினான் சுப்பன். உடனே தீயை எடுத்துத் தன் வீட்டில் வைத்தான். வீடு தீப்பிடித்து எரிந்தது. குப்புசாமியும் காளியம்மாளும் தண்ணீர் விட்டு அணைத்தார்கள். கரியை எடுத்துக்கோணியில் அடைத்துக் கொண்டு புறப்பட்டான் குப்புசாமி. தற்செயலாக முத்து வியாபாரிகள் வந்தார்கள். அவர்கள் முன் வியாபாரம் செய்த இடத்தில் கரியைக் கண்டு வருந்தினார்கள். இவன்தான் ஏமாற்றினான் என்று எண்ணிக் கொண்டார்கள்.

''ஐயா! இந்த மூட்டையைப் பார்த்துக் கொள்மாட்டுக்குத் தண்ணீர் காட்டி வருகிறோம்'' என்றார்கள். மூட்டைகளை இறக்கி வைத்துவிட்டு ஆற்றில் இறங்கி மாடுகளுக்குத் தண்ணீர் காட்டினார்கள். குப்புசாமி மெல்லக் கரிமூட்டையை முத்து மூட்டைகளுடன் சேர்த்துவிட்டு ஒரு முத்து மூட்டையை எடுத்துத் தன் பக்கம் வைத்துக் கொண்டான்.

இதை அவர்கள் குறிப்பாகப் பார்த்துக் கொண்டார்கள். அங்கிருந்து வந்து அவனுடைய மூட்டையைப் பிடுங்கிக் கொண்டு, பல்லைக் கொட்டி அவன் கையில் கொடுத்து, எலும்பு நெக்குவிட அடித்து விரட்டினார்கள். குப்புசாமி ஆலகாலம் போல் கொதித்துக் கொண்டு வந்தான். அவனும் அவன் மனைவியும் சேர்ந்து, பலாத்காரமாகச் சுப்பனைப் பிடித்து ஒரு கோணிப்பையில் போட்டுக் கட்டி எடுத்துக் கொண்டு போய் மயானத்தில் வைத்து விட்டு, கட்டை மூட்டைகளைத் தேடிச் சென்றார்கள்.

அந்தத் தனியான இடுகாட்டின் வழியே ஓர் ஆயன் ஆடுமாடுகளை ஓட்டிக் கொண்டு சென்றான்... ''இது என்ன மூட்டை?'' என்று காலால் உதைத்தான்.

சுப்பன், ''எனக்கு வேண்டாம்'' என்று கத்தினான்.

ஆயன் மூட்டையை அவிழ்த்தான். சுப்பன் வெளிப்பட்டான்.

''நீயார்? என்றான் அந்த ஆயன்.

சுப்பன், ''உன் அன்புக்கு வணக்கம். அடுத்துள்ள நகரத்தைப் பரிபாலிக்கின்ற அரசனுடைய மகள் என்னைக் கண்டு காதல் கொண்டாளாம். எனக்கு ஏற்கனவே கல்யாணம் ஆகிவிட்டது. எனக்குக் கல்யாணம் வேண்டாம் என்றேன். அரசசேவகர்கள் பலாத்காரமாகக் கோணிப்பையில் போட்டுக் கட்டிக் கொண்டு போகிறார்கள்'' என்றான். ஆயன் இதைக் கேட்டுச்சிரித்தான்.

''அறிவு கெட்ட மூடனே! அரசனுடைய மகளை வேண்டாம் என்று சொல்லலாமா? எனக்குக் கல்யாணம் ஆகவில்லை. என்னை இந்தப் பையில் போட்டுக் கட்டி விடு. இந்த ஆடுமாடுகளை நீஓட்டிக் கொண்டு போ, நான் போய் அரசகுமாரியைக் கல்யாணம் செய்து கொள்வேன்'' என்றான்.

சுப்பன், ''உனக்கு அப்படி ஒரு அதிர்ஷ்டம் இருக்குமானால் அதற்கு நான் தடையாக இருக்கக்கூடாது'' என்று கூறி அந்த ஆயனைக் கோணியில் போட்டுக் கட்டி வைத்து விட்டு, ஆடுமாடுகளை ஓட்டிக் கொண்டு வீட்டுக்கு வந்தான்.

குப்புசாமி கட்டை மூட்டைகளைக் கொணர்ந்து அடுக்கிக் கோணி மூட்டையைத் தூக்கி வைத்துத் தகனம் செய்துவிட்டு, நீரில் முழுகிவிட்டு, தலையைக் கோதிக்கொண்டு வீட்டுக்கு வந்தான். அருகில் ஏராளமான ஆடு மாடுகளோடு தம்பி நிற்பதைக் கண்டான்.

அவனுக்குத் தன் கண்களை நம்பவே முடியவில்லை.

''தம்பி அடேய்! உன்னைக் கொளுத்தி விட்டேனே? எப்படிப் பிழைத்து வந்தாய்?'' என்று கேட்டான்.

''அண்ணா! என்னை நீகொளுத்தினாய். நான் தெய்வலோகம் போனேன். அப்பா அவர்களைப் பார்த்தேன். என்னைத் தழுவி உச்சி மோந்து முத்தம் கொடுத்து இன்னுரை சொன்னார். 'ஏன் இங்கு வந்தாய்?' என்று கேட்டார்? 'அண்ணா அனுப்பினார்' என்று சொன்னேன். 'இந்தா இந்த ஆடுமாடுகளை ஓட்டிக்கொண்டு போ' என்றார். உனக்கும் ஆசி கூறினார். உனக்கு வேண்டுமானால் இதில் தேவையான ஆடுமாடுகளை நீஎடுத்துக்கொள்'' என்றான்.

இதைக் கேட்ட காளியம்மாள், ''இங்கே பார் என் பேச்சைக் கேள். இவன் கொடுக்க நீவாங்கினால் உனக்கு அவமானம். நீநேரே போய் உன் அப்பாவிடம் இதைவிட இரட்டிப்பாக வாங்கி வா'' என்று கூறி இம்சித்தாள்.

''தம்பி! என்னைக் கொண்டு போய்க் கொளுத்து நான் போய் அப்பாவிடம் வாங்கி வருகிறேன்'' என்றான்.

''அண்ணா வேண்டாம். உன்னை நான் கொளுத்த மாட்டேன்''


அன்றிரவு காளி, '' உன் தம்பிக்குக் கெட்ட எண்ணம். நீபோய் உன் அப்பனிடம் ஆடு மாடு வாங்கி வரக்கூடாது என்று எண்ணுகிறான். அவன் வெட்கப்படும்படி நீபோய் வாங்கி வா'' என்று கூறி இடித்தாள். தன் வீட்டு வேலைக்காரனைப் பார்த்து ''அடே, எஜமானை நீகொளுத்து, ஆடு மாடு வாங்கி வருவார்'' என்று கோணிப்பை கொணர்ந்து கொடுத்தாள். அறிவு கெட்ட குப்புசாமி கோணியில் உட்கார்ந்தான். காளியம்மாள் கட்டி வேலையாள் தலையில் வைத்து அனுப்பினாள். வீட்டிலிருந்தே கட்டை மூட்டைகளை வண்டியில் வைத்து அனுப்பினாள். மயானத்தில் தீ வைத்துச் சாம்பலாக்கி விட்டான் பணியாளன்.

காளியம்மாள் ஆடுமாடுகளுடன் கணவன் வருவான் என்று எதிர் பார்த்தாள். வரவில்லை. அழுதாள். கொழுந்தனிடம் போய், '' தம்பி அண்ணா இன்னும் வரவில்லையே, எப்பொழுது வருவார்?'' என்றாள்.

''அண்ணி! எங்கே அனுப்பினாய்?''

'' தீ வைத்துக் கொளுத்தினேன். உன்னைப்போல் அப்பாவிடம் ஆடு மாடுகள் வாங்கி வரும் பொருட்டு அனுப்பினேன். இன்னும் வரவில்லையே''

'' அண்ணி! அண்ணாவை அப்பா அனுப்புவாரோ அனுப்ப மாட்டாரோ? வினை விதைத்தவன் வினையறுப்பான். இனியாவது நீதிருந்திய புத்தியுடன் என்னுடன் இரு. உன்னை அன்னை போல் நான்காப்பாற்றுவேன்'' என்றான்.



பிரதி வெள்ளி தோறும் மகளிரால் உள் புறப்பாடு செய்யப்படும் சென்னை, நுங்கம்பாக்கம் அருள்மிகு அகஸ்தீஸ்வரர் திருக்கோயில் சுக்கிரவார அம்மன் புறப்பாடு.

# பிட்சாடன மூர்த்தம்

(க.சுகுமாரன், மன்னார்குடி)



சிவபெருமான் தன்னை வழிபடும் அன்பர்களுக்கு அருள்புரிதற் பொருட்டு, அவ்வப் பொழுது மேற்கொண்ட அருளுருவத் திருமேனிகள் இருபத்தைந்து என்றும், அறுபத்தி நான்கு என்றும் நூல்கள் நுவலும். அவற்றுள் பிட்சாடன மூர்த்தம் என்பதும் ஒன்றாகும்.

முன்னொரு காலத்தில் தாருகா வனத்தில் இருந்த முனிவர்கள் யாவரும் சிவபெருமானிடத்தில் அன்பு இல்லாதவர்களாய், வேள்வி முதலிய கருமங்கள் தாமே, தமக்கு வீடுபேற்றை அளிக்க வல்லனவாகும் என்னும் கொள்கையை மேற்கொண்டு, கடவுளுணர்ச்சியைக் கைவிட்டுச் செருக்குற்று நின்றனர். அந்நிலையில் அவர்களின் தற்போதச் செருக்கை அகற்றி, நற்போதம் அளித்து நல்வழிப்படுத்த நினைத்தார் சிவபெருமான். மகாவிஷ்ணுவை அழகிற்சிறந்த மோகினி வடிவம் எடுத்துக் கொண்டு தம்முடன் வரப்பணித்தார். அழகெல்லாம் ஒருங்கே திரண்டதாய் அனைய பிட்சாடன மூர்த்தியாகத் தாம் திருவுருவம் தாங்கினார். இருவருமாக தாருகாவனம் சென்று, அங்கு இருந்த முனிவர்களுக்கும், முனிபத்தினி மார்களுக்கும், அவர்களின் செருக்கு அடங்கும் வண்ணம், மையல் ஊட்டி மாழ்கச் செய்து, பின்னர் மெய்யுணர்வு நல்கி ஆட்கொண்டு அருள்புரிந்தார். இவ்வரலாற்றினைக் கந்த புராணம் 'ததிசியுத்தரப் படலம்' விரிவாக விளக்குதல் காணலாம்.

பிட்சாடன மூர்த்தி, கங்காளமூர்த்தி, பயிரவ மூர்த்தி ஆகிய மூர்த்திகளின் திருவுருவ அமைப்புகள், பெரும்பாலும் ஒத்திருக்கும். கூர்ந்து நோக்கினால் மட்டுமே வேறுபாடுகளை அறிந்து கொள்ளுதல் இயலும்.

பிட்சாடன மூர்த்தம் ஆடையின்றி வெற்றரையாக இருக்கும் நான்கு திருக்கரங்கள் உண்டு. இடக்கையில் பிச்சைப் பாத்திரமும், வலக்கையில் தமருகம் அல்லது சூலமும் அமைந்திருக்கும். இடக்கால் தரையில் ஊன்றியிருக்கும். வலக்கால் நடப்பதற்கு அடையாளமாகச் சற்று வளைந்து தளர்ந்திருக்கும். தலையில் 'ஜடாபாரம்' அல்லது 'ஜடாமண்டலம்' இருக்கக் காணலாம். இடுப்பில் பாம்பு ஒன்று சுற்றியிருந்து அணி செய்யும் **''அற்றம் மறைப்பது முன்பணியே''** என்பது தேவாரம். அதன்படி அப்பாம்பே அற்றம் (மறைவிடம்) தோன்றாதபடி அங்கு அழகுறுத்திக் கொண்டு விளங்கும், நெற்றியிற் பட்டம் திகழும். 'திரிநேந்திரம்', 'திருநீல கண்டம்' முதலிய சிறப்பு இயல்புகள் இத்திருவுத்திற்கும் உண்டு. மார்பில் 'பூணூல்' ஒளிரும். வலக்கையில் 'வீரக்கழல்' விளங்கும். திருவடிகளை

'வேதப் பாதுகைகள்' தாங்கி நிற்கும். 'கபாலம்' அல்லது பிச்சைப்பாத்திரம் ஏந்திய கை உந்தி வரையில் உயர்ந்திருக்கும். தமருகம் (உடுக்கை) ஏந்திய வலக்கை, காது வரையில் சென்று ஒளிரும் இந்நிலையில் காதுக்கும் வலக்கையின் முன்னங்கைக்கும் 16 அங்குலம் தொலைவு இடைவெளி இருத்தல் வேண்டும் என சிற்ப நூல்கள் கூறும்.

கபாலம் ஏந்திய இடப்பக்கப் பின்னங்கை 'கடக முத்திரை' நிலையில் இருக்கும் வலப்பக்கம் ஒரு மானும், இடப்பக்கம் ஓர் குறட்பூதமும், பிட்சாடன மூர்த்தத்தின் சிற்பங்களில் அமைந்திருக்கக் காணலாம்.

**''அடியிற் றொடுத்த பாதுகையும்**
**அசைத்த நடையும் இசைமிடறும்**
**வடியிற் சிறப்ப நடந்தருளி**
**மூழை ஏந்தி மருங்கணைந்த**
**தொடியிற் பொலிதோள் முனி மகளிர்**
**சுரமங் கையரை மயல்பூட்டிப்**
**படியிட் டெழுதாப் பேரழகாற்**
**பலிதேர் பவன் திருவுருவம்''**

எனப் பிட்சாடன மூர்த்தத்தின் பேரழகினையும் சிறப்பினையும் வியந்து சிவஞான சுவாமிகள் திறந்தெறிந்து பாடி அருளியுள்ளார்.

திருவெண்காட்டில் அமைந்து திகழும் செப்புப் படிமமும், கும்பகோணம் நாகேசுவர சுவாமி கோயிலுள்ள ஒரு சிற்பமும், பிட்சாடன திருவுருவங்களில் மிகவும் கலை நலம் பெற்றுத் திகழ்கின்றன என்பர். மயிலாடுதுறை வட்டத்தைச் சேர்ந்த வழுவூர்ப் பிட்சாடனர் திருவுருவமும் மிகவும் அழகு வாய்ந்து மிளிர்வதாகும்.

எல்லாம் வல்ல இறைவன் ஆகிய சிவபெருமான், பிச்சைக்கலன் ஏந்திப்பிச்சையேற்கும் பிட்சாடன மூர்த்தியாக விளங்குவது பற்றி ஒரு சிலர் தவறாகக் கருதலாம். ஆனால் 'அருமை பெருமைகள்'மிக்க இறைவன் தன்னுடைய எளிமைத்தன்மை இனிது விளங்கும் படியாகத் திகழும் நிலையே, பிட்சாடன மூர்த்தம் என்பது அறிதற்குரியது. ''அருமையில் எளிய அழகே போற்றி'' என்றார் மாணிக்க வாசகர். அம்முறையில் பிட்சாடனத் திருவுருவம், 'அருமை' 'எளிமை' 'அழகு' என்னும் மூன்றும் ஒருங்கே அமைந்து ஒளிர்கின்றது எனலாம்.

பிட்சாடனப் பெருமாள் நம்மிடம் பொன்னும் பொருளும் கேட்கின்றிலர், நம்முடைய அன்பையும், நன்றியையுமே அவர் பெற விரும்புகின்றார்.

**''வெள்ளை நிற மல்லிகையோ?**

**வேறு எந்த மாமலரோ?**

**வள்ளற் பிரானுக்கு**

**வாய்த்த மலர் எதுவோ?**

**வெள்ளை நிற மல்லியல்ல**

**வேறு எந்த மலருமல்ல,**

**உள்ளக் கமலமடி**

**உத்தமனார் வேண்டுவது!**

எனச் சுவாமி விபுலானந்தர் பாடுவது போல நம்முடைய உள்ளம் ஒன்றினையே, இறைவன் தாம் பெற விரும்புகின்றார்.

**''தந்துன் றன்னைக் கொண்டதென் றன்னை''**

என்றாற் போல, நம்முடைய குற்றங்களையெல்லாம்தாம் பெற்றுக் கொண்டு, தம்முடைய குணங்களை எல்லாம் இறைவன் நமக்குத் தந்தருள விரும்பும் திருக்கோலமே, பிட்சாடன மூர்த்தம் என்றும் கூறலாம்.

ஒரு சிறந்த ஆசிரியன், அறிவற்ற மற்றையோர்க்கு அறிவுடைமையைத் தான் கற்றுத் தருவதாகப் புலப்படுத்தாமல், தானே மற்றையர்கள் பால் இருந்து கற்று கொள்வது போலக் காட்டிக் கொண்டு நயம்படக் கற்பிப்பான், ஒரு சிறந்த வள்ளல், வறியவர்களுக்கு தான் வாரி வழங்குவது புலனாகா வண்ணம் அடக்கமாக விளங்கி, அவர்களிடமிருந்து தானே ஏதோ ஒன்றைப் பெற்றுக் கொள்வது போல் இன்னுரைகள் இயம்பி, இவ்வகையால் அரிய உதவிகள் புரிவான், அத்தகைய சிறந்த முறையில், நமக்கெல்லாம் எல்லா வகை நலங்களையும் ஒருசேர அளித்தருளும் பெருங் கொடையாளனாகத் திகழும் சிவபெருமான், தானே நம்மிடமிருந்து ஏதோ ஒன்றை பெற விரும்பும் ஓர் இரவலன் போல, இனியதொரு நாடகம் நடித்து, அவ்வழியாகவேனும் நம்மையெல்லாம் ஆட்கொண்டு அருளவேண்டும் என விரும்பி எளிவந்து எழுந்தருளும் பேரருள் நிலையே, பிட்சான மூர்த்தம் எனலாம்.

''இரவலர்கள் என்றால் நாம் ஏதோ இழிவாகக் கருதுகின்றோம். இரவலர்கள் போன்ற வள்ளல்கள் எவரும் இலர். இரப்பவர்கள் இருப்பதனால் தான், கொடுக்க முடிகின்றது. கொடையளிப்பதால் தான் இம்மையிற் புகழும், மறுமையில் வீடுபேறும் அடைகின்றோம். அழிந்து போகும் பொருள் சிறிதளவைப் பெற்றுக் கொண்டு, அழியாத

புகழையும் வீடு பேற்றையும் நமக்குக் கொடுக்கின்ற இரவலர்கள் தான், உள்ளபடி நோக்கினால் வள்ளல்களாக விளங்குகிறார்கள்.''

''பரப்பு நீர் வையத்துப்
பல்லுயிர்கட்கு எல்லாம்
இரப்பாரின் வல்லல்கள்
இல்லை- இரப்பவரே
இம்மைப் புகழும்
இனிச்சொல் கதிப்பயனும்
நம்மைத் தலைப்படுத்த லால்!
- அறநெறிச்சாரம்.

என முனைப்பாடியார் என்னும் புலவர் அழகுறப் பாடியருள்கின்றார். அம்முறையில் நோக்கினும் பிட்சாடன மூர்த்தத்தின் பெருமையும் சிறப்பும் வெளிப்படும்.

இக்கருத்தினையே திருமூலர் பெருமானும், தமது திருமந்திரநூற் பாடல் ஒன்றில் குறிப்பிடுகிறார். **''எல்லா உலகும் படைத்த இறைவனை ஒரு சிலர் 'இரந்துணி'** (பிச்சைக்காரன்) என்று கூறி இகழ்கின்றனர். இறைவன் எதற்காக இரக்கப் போகின்றான்? தான் இரப்புத் தொழிலை மேற்கொள்வதன் மூலம், அவனுக்கு நாம் ஈயப்பெறும் வாய்ப்பை நமக்கு அவன் உண்டாக்கிக் கொடுத்து, அதன் வாயிலாக, நாம் அவனுடைய எட்டாத திருவடிகளை எட்டிப்பிடித்துக் கொள்ளும்படி இன்னருள் புரிகின்றான்'' என்கின்றார் திருமூலர்.

''பரந்துல கேழும் படைத்த பிரானை
இரந்துணி என்பார்கள் எற்றுக்கு இரக்கும்
நிரந்தரமாக நினையும் அடியார்
இரந்துண்டு தன் கழல் எட்டச் செய்தானே''
- திருமந்திரம்

''எங்கள் சிவபிரானைக் கூத்தாடி, பிச்சைஎடுப்பவன் என்று எளிதாகக் கருதி விடாதீர்கள்! வேதங்களே தன்னை அறிய முடியாமல் 'எம்பெருமான்! ஈசா!' என்று ஏத்தி வழுத்தும் மாட்சிமை மிக்கவன் எங்கள் இறைவன்'' என அறிவுறுத்துகின்றார் மாணிக்க வாசகர்!

''அம்பலத்தே கூத்தாடி
அமுதுசெயப் பலிதிரியும்
நம்பனையும் தேவன் என்று
நண்ணுமது என்னேடி!
நம்பனையும் ஆமாகேள்
நான் மறைகள் தாம் அறியா
எம்பெருமான் ஈசா என்
றேத்தின காண் சாழலோ!''
-திருச்சாழல்

இங்ஙனம் சுவை மிகுந்த சிறந்த பாடல்கள் பல, பிட்சாடன மூர்த்தத்தினைக் குறித்துத் திருமுறைகளிலும், சிறு பிரபந்த வகைகளிலும் காணலாம். அவற்றால், பிட்சாடனரின் பெருமை இனிது புலனாகும்.

''பம்பா தரவிற் கடிஞை கொளும்
பயிக்க வேடத் தரைப் பாசில்
கொம்பே ரிடையார் கரம் நெறிப்பக்
கொள்ளும் போகம் பெறுப்பிப்பர்''

என கச்சியப்ப முனிவர் பாடியிருத்தல் போல, இப்பிட்சாடனப் பெருமானை வழிபடுதலின் மூலம், உலகியல் இன்பச் சுழல்களிற் சிக்குண்டு கலங்கி மயங்கி தியங்காமல், அவற்றை வெறுத் தொதுக்கி வென்றடக்கி நலம் பெறலாம் என்பதில் ஐயமில்லை.

குறிப்பு - பிட்சாடனர் மூர்த்தங்கள், திருவாஞ்சியம், மேலப் பெரும்பள்ளம், திருவிடைமருதூர், வழுவூர், திருவிசய நல்லூர், திருவையாறு, ஆகிய தலங்களில் இருந்து சிறப்பாக அருள்புரிகின்றார்.


திருக்கோயில்
திங்கள் இதழ்



| | |
|---|---|
| தனி இதழின் விலை | ரூ 10/ |
| ஓராண்டுச்சந்தா | ரூ 120/ |
| ஐந்து ஆண்டுச் சந்தா | ரூ. 500/ |
| பத்து ஆண்டுச்சந்தா | ரூ 1000/ |
| ஆயுட்காலச்சந்தா | ரூ 1500/ |

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

''திருக்கோயில்'' இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்!

திருத்திய விளம்பரக் கட்டண விவரம் :

| | |
|---|---|
| 1. பின் பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்) | ரூ 15,000/ |
| 2. முன் பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்) | ரூ 10.000/ |
| 3. பின் பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்) | ரூ 7,500/ |
| 4. உள்புறம் முழுப்பக்கம் | ரூ 5,000/ |
| 5. உள்புறம் அரைப்பக்கம் | ரூ 3,000/ |

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, 119, உத்தமர் காந்தி சாலை சென்னை 600 034 என்ற முகவரிக்கு அனுப்பவும்.

# உலகம் உய்ய உதித்த உடையவர்

பெ.ராமநாதபிள்ளை, செயல் அலுவலர், திருமூர்த்திமலை உடுமலை வட்டம்.



சென்ற இதழ் தொடர்ச்சி

திருக்கோட்டி நம்பியின் அருளைப்பெறாத காரணத்தினால் நெருப்பில் அகப்பட்ட மெழுகைப்போல இராமானுஜர் உருகினார். ஒரு நாள் பெருமாளின் சன்னதியில் மிகுந்த மனவேதனையோடு முன்னும் பின்னுமாய் திரிந்த வண்ணம் இருந்த போது ஒரு பாகவத உத்தமர் அங்கு வந்தார். இராமானுஜர் ''பொன்னாழிக்கை யார்க்குப் பூத்துழாய் முடியார்க்கு இங்கு என்னாவி ஈடழித்தல் தவறென்று இயம்பீரே'' (திருவாய் மொழி 9-7-9) என்று சொல்லி விம்மிவிம்மி அழுது கொண்டே இருந்தார். அதைப்பார்த்த அந்த பாகவதர் திருக்கோட்டி நம்பியிடம் சென்று இராமானுஜர் நிலையை எடுத்துக்கூறினார். அதைக் கேட்ட திருக்கோட்டி நம்பிகள் இவ்வளவு ஆர்வம் உண்டாகியிருக்கிறதா, என்று சொல்லி பெருமை பொருந்திய இராமானுஜரை ஒரு மாதம் ஆகாரம் ஏதும் உண்ணாது உபவாசம் இருந்து பின் என்னிடம் வரச்சொல்வாயாக என்று அந்த பாகவதரிடம் சொல்லி அனுப்பினார். அந்த பாகவதரும் திருக்கோட்டி நம்பியின் திருவடிகளை வணங்கி இராமானுஜரிடம் மகிழ்ச்சியோடு சென்று மேற்படி செய்தியைச் சொன்னார். அது கேட்ட இராமானுஜர், தானும் அவ்வாறே இருக்கிறேன் என்று சம்மதம் தெரிவித்து ஆகாரம் ஏதும் இல்லாமல் தண்ணீர் கூட பருகாமல் பதினாறு நாட்கள் கழித்தார். பதினேழாம் நாளில் பட்டினி மயக்கத்தாலே இராமானுஜருக்கு உடம்பிலே மூச்சு அடங்குவதை அவருடைய சீடர்கள் பார்த்துவிட்டு மிகவும் மனம் வருந்தி திருக்கோட்டி நம்பியிடம் இராமானுஜரின் நிலையை எடுத்துச் சொன்னார்கள். ஆனால் சற்றும் கலக்கமில்லாமல் ''இராமானுஜருக்கு உயிர் போவதாக இருந்தால் அவர் வைகுண்டம் சென்று அங்கே வைகுண்டத்தில் இருக்கின்ற ஆளவந்தாரிடம் கேட்டுத் தெரிந்து கொள்வார் உயிர் போகாது உடம்போடு இருந்தால் நானே உபதேசிக்கிறேன் இரண்டில் ஒன்று நிச்சயம் என்று கூறினார்''.

**''ஆனாததிருத்தொண்டர் அழுதுநம்பிக்(கு) அவைகூறப்**
**போனானேல் ஆளவந்தார் பால்கேட்பன் போகிலனேல்**
**நானாக உரைக்கின்றேன் நாளையா றிளையாழ்வான்**
**தானாகத் தொடுமிருந்தால் தப்பா(து) ஈ(து) இரண்டிலொன்று**

*ஸ்ரீராமானுஜ வைபவம் பாடல் 328*

திருக்கோட்டி நம்பியிடம் இப்பதிலை எதிபார்க்காத இராமானுஜரின் சீடர்கள் தாங்கள் இவ்வாறு கூறலாகாது. இராமானுஜருக்கு உணவும் உள்ளங்கை தீர்த்தமும் முறைப்படித் தருவீராக என்று திருக்கோட்டி நம்பியிடம் ஏக்கத்துடன் வேண்டவும், தீர்த்தம் மட்டும் பருகுவதற்கு சம்மதிக்கிறேன் என்று திருக்கோட்டிநம்பி கூறவும், மீண்டும் இராமானுஜரிடம் வந்து தாங்கள் உணவருந்த வேண்டும் என்று மிகவும் மன்றாடி வேண்டினார்கள். ''நம்பி பருக உத்தரவிட்டார்'' என்று அந்த தீர்த்தத்தை, கொடுத்து பருகச் செய்தார்கள். இவ்வாறாக ஒருமாதம் கழிந்தது.

அதன் பின்னர் திருக்கோட்டி நம்பி

அன்பரை இராமானுஜரிடம் அனுப்பவும் அந்தச் செய்தியை அந்த அன்பர் இராமானுஜரிடம் தெரிவித்தார்.

இராமானுஜர் மிகவும் மனம் மகிழ்ந்து தன்னுடன் கூரத்தாழ்வாரையும், முதலியாண்டானையும் அழைத்துச் சென்று திருக்கோட்டி நம்பியின் திருவடிகளை வணங்கி நின்றார். இராமானுஜர் தனியாக வராமல் கூரத்தாழ்வாருடனும், முதலியாண்டாருடனும் வந்ததை கண்ட திருக்கோட்டி நம்பிகள் இராமானுஜரிடம் ''நான் தங்களை தனியாகத்தானே வரச்சொன்னேன்'' ஏன் இவர்கள் இருவரையும் அழைத்து வந்தீர் என்று வினவினார். அதற்கு இராமானுஜர் இப்பொழுது தங்கள் தாசனாகிய நான் தனியாகத்தான் வந்திருக்கிறேன். முதலியாண்டாரும், கூரத்தாழ்வாரும் எனக்கு பவித்தரமும், தண்டுமாக விளங்குபவர்கள்.

**''தேசிகன் அவணம் கூறச் சீர்பெரும் பூதூர் வள்ளல்**
**ஆசிலா நிலையாய் தொண்டன் அப்படித் தானே வந்தேன்**
**நீசனேன் பவித்தி ரந்தான் இவன் அவன் நினைவில் ஒன்றிப்**
**பேசின்நல் தண்டாம் அன்றே என்றுதன் பின்புநின்ற''.**

*ஸ்ரீராமானுஜ வைபவம் பாடல் 335.*

என்று கூறினார்.

திருக்கோட்டி நம்பி இராமானுஜரை தனியாக அழைத்துச் சென்று ''உடையவரே உமது சீடர்களுக்கு நீர் திருமந்திரத்தை பொருளோடு கூறுவீர் மிகவும் ரகசியமான அதனை வேறு எவருக்கும் கூறாதீர்'' தற்பொழுது உமக்கு மட்டும் அந்த அருகதை உள்ளது. அந்த அர்த்தத்தை அறிந்து கொள்ளும் தகுதி வேறு எவருக்கும் இல்லை என்று சொல்லி நான் உனக்கு உபதேசிக்கிறேன் என்று சொல்லி இராமானுஜரிடத்தில் சொல்ல ஆரம்பித்தார்.

''மைந்தனே இந்த ரகசியத்தை திருத்துழாய் மாலை அணிந்த திருமால், திருமகளுக்குச் சொல்லவும், திருமகள் நித்திய சூரிகளின் தலைவனான சேனை முதலியாண்டாருக்கு உபதேசிக்கவும், சேனை முதலியாண்டார் இவ்மண்ணுலகில் வந்த நம்மாழ்வாருக்கு உபதேசிக்கவும், நம்மாழ்வார். நாத முனிக்கு அருளிச் செய்யவும், நாத முனியும் அதனை ஞானம் மிகுந்த உய்ய கொண்டாருக்கு உபதேசிக்கவும், உய்ய கொண்டார் அதனை மணக்கால் நம்பிக்கு உபதேசிக்கவும், மணக்கால் நம்பி ஆளவந்தாருக்கு உபதேசிக்கவும், அடியேனாகிய திருக்கோட்டி நம்பி, ஆளவந்தாருக்கு சீடராக இருந்து இதனைப் பெற்றுக்கொண்டேன். இன்று வரையிலும் ஓர் ஆசான் வழியாகவே இது வந்திருக்கிறது. நீரும் உமது இறுதிக் காலத்தில் நிலைந்த ஞானமுடைய ஒரு நபருக்கு இந்த ரகசியார்த்தத்தை உபதேசிப்பதை தவிர வேறு ஒருவருக்கும் சொல்லமாட்டேன் என்று நீர் இன்று என் காலையைத் தொட்டு சத்தியம் செய்து தர வேண்டும்'' என்று சொல்லவும் தன் உயிரைப் பற்றி துளியும் கவலைப்படாத இராமானுஜர் ''எந்தனையே அப்படியே செய்வேன்'' என்று அவருடைய திருவடியை வணங்கி அவருடைய இரண்டு திருவடியையும் பிடித்துக் கொண்டு, தங்களிடம் தெரிவித்த சத்தியப்பிரமாணத்தில் இருந்து தவறமாட்டேன் என்று சொல்லவும் திருக்கோட்டிநம்பி ஒப்பற்ற பெருமை உடைய இராமானுஜரின் காதில் அந்த சரமசுலோகத்தை உபதேசித்தார்.

**''அப்படிச் செய்வேன் எந்தாய் என்றெழுந்(து) அடியில் தாழ்ந்து**
**செப்பருநம்பி செய்ய திருவடி இரண்டும் தீண்டித்**
**தப்பிலேன் அருளிச் செய்த படியெனச் சாற்ற நம்பி**
**ஒப்பிலார் செவியில் அந்த உண்மையை உபதே சித்தான்''.**

*ஸ்ரீராமானுஜ வைபவம் பாடல் 341.*

இராமானுஜர் அந்த சரமசுலோகத்தை திருக்கோட்டி நம்பி அதன் பொருள் விளக்குமாறு வணங்கிக் கேட்டார். மேலும் இராமானுஜரின் கண்களில் கண்ணீர் தளும்பக் குறையாத தன்மையுடையவனாகி, திருக்கோட்டி நம்பியினை கீதாச்சார்யனான கண்ணனாகவே நினைத்துத் துதித்தார். மேலும் பெருமை பொருந்திய பரமபதத்தில் இருக்கின்ற பெருமாள் உலக உயிர்களுக்காக இரங்கி இப்பரந்த உலகில் அவதரித்து இருக்கும் தம்மை அறியாமல் சம்சார கடலிலே உயிர்கள் வருந்துகின்றனவே என்ற ஞான நிலையில் நின்று மனம் இரங்கி அழுதார்.

அவ்வாறு அழுதுநின்ற இராமானுஜரை நோக்கி ஒப்பற்றவரே இனி உம்மாலே உலகிலுள்ள உயிர்கள் எல்லாம் தவறாமல் பரமபதத்தை அடைவார்கள், நரகத்தை அடைய மாட்டார்கள் கொடுமை மிக்கக் கலியும் கெடும் உலகத்தோருக்கு துன்பம் இல்லை என்றார்.

**''அப்படி அழுது நின்ற அன்பரை நம்பி நோக்கி**

ஒப்பிலாய் இனி உன்னாலே உலகிடை
உயிர்களெல்லாம்
தப்பற மேலை வீட்டைச் சாருமா நரகம்
சாரா
வெப்பமார் கலியும் தீரும் மேதினிக்(கு)
இடமும் இல்லை''.

ஸ்ரீராமானுஜ வைபவம் பாடல் 345.

இவ்வாறு அருளிச்செய்த திருக்கோட்டி நம்பியினது இரண்டு திருவடிகளையும் பிடித்துக் கொண்டு தன் திருமுடியிலே வைத்து பின்னர் மார்பிலே அத்திருவடிகளைப் பதித்துக் கொண்டு தரையிலே விழுந்து வணங்கவும், திருக்கோட்டியூர் நம்பி இராமானுஜரைப் பார்த்து இனி நீர் புறப்பட்டு செல்வீராக என்று சொல்லவும் , இராமானுஜரும், முதலியாண்டாருடனும் கூரத்தாழ்வாருடனும் அவ்விருவரும் இடப்புறமும், வலப்புறமுமாக வரத் திரும்ப எழுந்தருளினார்.

உலகம் உய்ய உதித்த உடையவர் புறப்பட்ட அந்த தினம் ''உலகோர் உய்வதற்காகவே எம்பெருமானால் ஏற்படுத்தப்பட்ட தினமாகும்''. திருக்கோட்டியூரில் அன்றைய தினத்தில் நரசிங்கப் பெருமாளின் பெருந்திருவிழா நடைபெற்றுக் கொண்டிருந்தது. அந்த பெருந்திருவிழாவைக்காண எல்லாத்திசைகளில் இருந்தும் ஸ்ரீவைஷ்ணவர் அனேகர்கள் வந்திருந்தனர். அவர்களைக்கண்ட உடையவராகிய ராமானுஜருக்கு உகப்பு மேலிட்டது, மேகமானது தண்ணீர் முழுவதையும் பொழிந்த பின்னர் அழிந்துவிடுவதை போல பாகவதர்களைக் கண்ட மாத்திரத்தில் இராமானுஜர் மனம் அழிந்தார் திருக்கோட்டி நம்பியின் திருவடியை தொட்டு சத்தியம் செய்த சத்தியத்தை நான் மீறினால் நான் மட்டும் தான் அழிவேன், ஆனால் இந்த வைஷ்ணவக் கூட்டமெல்லாம் மிகப்பெரிய பேரின்பத்தை அனுபவிப்பார்கள் அல்லவா? என்று எண்ணி மகிழ்ச்சி அடைந்தார்.

''தானறப் பெய்து மாயும் தடமுகில்
என்ன நம்பி
தேனமர் கமலத் தாளைத் தீண்டிய
தோடத்தாலே
நானொரு வனுமே யன்றோ நசிப்பதித்
திரள்கள் எல்லாம்
ஆனவான் பேரின் பத்தை அருந்துமே
அந்தோ என்றே''.

ஸ்ரீராமானுஜ வைபவம் பாடல் 354.

உடனே திருக்கோயிலின் திருக்கோபுரத்தில் வேகமாக ஏறினார். உச்சியில் நின்றார் நேரமோ நள்ளிரவு இந்தக் கோபுரத்தில் உச்சியில் இருந்து ஆச்சார்யர் உபதேசித்த மந்திரத்தை நினைவு கூர்ந்தார். ஆச்சார்யாருக்கு அவர் அளித்த சபதத்தை மறந்தார். அந்த திருமந்திரத்தை உரத்த குரலில் அங்கு கூடியிருந்த வைஷ்ணவர் அனைவரும் அறியும் வண்ணம் நன்கு உபதேசித்தார். இவ்வாறு பரம ரகசியமாக பாதுகாக்கப்பட வேண்டிய சரமசுலோகத்தை எல்லாரும் அறியுமாறு இராமானுஜர் அருளி செய்தார்.

தனக்கு அளித்த சபதத்தை உடையவர் மீறினார் என்பதை அறிந்த திருக்கோட்டி நம்பி உடனே உடையவரை அங்கே வரவழைத்தார். உடையவரும் திருக்கோட்டியின் மாளிகையை அடைந்து அவருடைய திருவடியில் வீழ்ந்து வணங்கினார். உடனே நம்பிகள் உடையவரை பார்த்து ''எழுந்திரும் உடையவரே பரம ரகசியமான இந்த மந்திரத்தை நீர் தகுதி பார்க்காமல் சொல்லக்கூடாது என்று கட்டளை இட்டே இதனை உமக்கு நான் உபதேசித்தேன், நீரும் சம்மதித்து சபதம் செய்தீர்'' ஆனால் இப்பொழுது உடனடியாக மீறிவிட்டீர், ஆச்சார்யாருக்கு துரோகம் செய்துவிட்டீர், இதனால் உமக்கு என்ன பலன் கிடைக்கும் தெரியுமா என்று வினவவும், உடையவர் சிறிதும் தாமதிக்காமல் '' இந்த ஆச்சார்ய துரோகத்திற்கு அடியேன் நரகத்தை அடைவேன்'' என்று பதில் உரைத்தார். இப்பதிலை கேட்ட திருக்கோட்டி நம்பி உடையவரே நரகம் செல்வது தெரிந்திருந்தும் ஏன் நீர் அச்செயலை செய்தீர் என்று கேட்டார். உடையவர் பணிவுடன் கைகளை கூப்பி ஆச்சார்யரே இந்த அபச்சாரத்தால் அடியேன் ஒருவனே நரகத்தில் விழுவேன், ஆனால் இம்மந்திரத்தைக் கேட்ட அனைவரும் தேவரீருடைய கருணையாலே தேவரின் திருவடியைப்பற்றிப் பரமபதத்தை அடைவார்கள்.

அடியேனுக்கு அதுவே திருப்தி தரும் என்றார்.

''என்னுயிர் ஒன்றும் அன்றோ
இருநரகடையும் கேட்ட
மன்னுயிர் பலவும் உய்யும் மந்திரத்
துறுதியாலே
நன்னெறி உடையாய் என்றே நானது
செய்தேன் அன்றிப்
பின்னொரு நினைவும் இல்லை
பேதையேன் நினைந்த(து)
என்றார்

ஸ்ரீராமானுஜ வைபவம் பாடல் 360.

இராமானுஜருடைய பதிலைக் கேட்டதும் நம்பிகள் மிகவும் மனம் மகிழ்ந்து. ''எதிராஜரே தனக்குத் தீய பலன் ஏற்பட்டாலும் பரவாயில்லை என்று அதனை ஏற்றுக் கொள்ள உறுதி கொண்டு பிறருக்கு மிக சிறந்த பலனைத் தர வேண்டும் என்று

விரும்புகிறேன் என்பவர். இவ்வுலகில் உம்மைத்தவிர வேறு எவரும் இருக்கமாட்டார். ஆகையால் உடையவரே எமக்கு நீரே இக்காலத்தில் ஸ்ரீரங்கநாதனாகி எம்பெருமானாய் இருக்கின்றீர் என்று நா தழுதழுக்க உணர்ச்சி மேலிட்டார். ஆனந்த கண்ணீர் உடம்பெல்லாம் பாய ''எம்பெருமானரே என்று அழைத்தார்'' உடையவரை ஆரத்தழுவினார். பின் அங்கு கூடியிருந்த ஸ்ரீவைஷ்ணவர்களை பார்த்து இந்த வைஷ்ணவ சித்தாந்தத்தை இன்று முதல் ஸ்ரீஇராமானுஜ சித்தாந்தம் என்போம். அதை ''எம்பெருமானார் தரிசனம்'' என்றே அழைப்போம் என்றார். அன்று முதல் உயர்ந்த வைஷ்ணவ மதம் ஸ்ரீஇராமானு சித்தாந்தம் என்றே அழைக்கப்பட்டு வருகிறது. ஸ்ரீகாஞ்சி வரதராஜப் பெருமாளால் எதிராஜர் என்று அழைக்கப்பட்டு, ஸ்ரீரங்கநாதரால் உடையவர் என்று அழைக்கப்பட்டு திருக்கோட்டி நம்பிகளால் எம்பெருமானார் என்று அழைக்கப்பட்ட ஸ்ரீஇராமானுஜரே நாம் அனைவருக்கும் ஆச்சார்யர் ஆவார்.


**''எம்பெருமானாருடைய**
**தரிசனமென்(று) இன்று தொட்டே**
**உம்பருமா முனிவர்களும் உலகேழும்**
**ஒலிகடல்சூழ்**
**இம்பருமா தவத்தினரும் இசைத்திடுக**
**என இசைத்துத்**
**தம்பெருமா கருணையெனும்**
**தடம்புனலால் எதிராசன்''.**

*ஸ்ரீராமானுஜ வைபவம் பாடல் 364.*

*(தொடரும்)*

# திருமகளே வருக !

திருமகளின் சிறப்புகளைக் கூறும் 100 பாடல்களைக் கொண்ட திருமகள் அந்தாதி என்ற நூலை வண்ணச்சரபம் ஸ்ரீ மத்தண்டபாணி சுவாமிகள் அருளிச் செய்துள்ளார். இதில் காப்புச் செய்யுள் ஒன்றும், வாழ்த்து ஒன்றும், பயன்கூறும் பாடல் ஒன்றும், சேர்த்து மொத்தம் 103 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இது திருமகளே என்று தொடங்கி திருமகளே என்று முடிகிறது. இந்நூலின் முதற்பாடலையும் இறுதிப்பாடலையும் காணலாம்.




**''திருமகளே திருப்பாற்கடல் ஊடன்று தேவர்தொழ**

**வருமகளே உலகெல்லாமும் என்றென்றும் வாழவைக்கும்**

**ஒருமகளே நெடுமால் உரத்தே உற்று உரம் பெரிது**

**தருமகளே தமியேன் தலைமீது நின்தாள் வையே''**
**(1)**

**''தனிப்புறு யோகமும் முயன்று ஆதரித்து தழை மலர் பெய்து**

**இனிப்புறு தோத்திரமும் செய்ய வல்லார்க்கு எத்திசையும்**

**தொனிப்புறு சீர்த்தி நல்கி கலியாதிய துன் பொழித்துச்**

**செனிப்புறு கன்மமும் தீர்ப்பாள் கமலத் திருமகளே''**
**(100)**

முதற்பாடலின் பொருள் : திருவாகிய செல்வமகளே, திருப்பாற்கடலில் அமுதத்தோடு தேவர்கள் தொழும் படியாக வந்த பெண்ணே உலகம் யாவற்றையும் உனது செல்வச்செழிப்பால் வாழவைப்பவளே, திருமாலின் மார்பிலேதங்கி வீரத்தைத் தந்து அவருக்கு வெற்றியைத் தருபவளே, அடியேன் தலையின்மீது நின் திருவடிகளை வைப்பாயாக.

ஸ்ரீமத் தண்டபாணி சுவாமிகளின் ''திருமகள் அந்தாதி''யினைத் தினமும் பாராயணம் செய்து திருமகளின் அருள்பெறுவோமாக.

# அருள்மிகு புஷ்பலதாம்பிகை சமேத பிரணவ வியாக்ரபுரீஸ்வரர்





**சோ**ழவள நாட்டில் காவிரியின் வடகரைத் தலங்களில் 31-வது தலமாக விளங்குவது பிரணவ வியாக்ரபுரம் எனப்படும் ஓமமாம் புலியூர். இங்கு வியாக்ரபாத முனிவர் பூசித்துப்பேறு பெற்றார். இத்தலத்துடன் பெரும்பற்றப்புலியூர், ஓமாம்புலியூர், பெரும்புலியூர், எருக்கத்தம்புலியூர், திருப்பாதிரிப்புலியூர் என்ற தலங்களிலும் அவர் வழிபாடு செய்துள்ளார். இந்த ஐந்தும் பஞ்சவியாக்ரபுரம் அல்லது ஐம்புலியூர்கள் என்று அழைக்கப்படுகின்றன.

இத்தலத்திற்கு ஞானசம்பந்தரின் பதிகம் ஒன்றும், அப்பர் சுவாமிகளின் பதிகம் ஒன்றும், ஆக இரண்டு திருப்பதிகங்கள் உள்ளன. உமையம்மைக்கு இறைவன் தட்சிணாமூர்த்தியாக இருந்து பிரணவப் பொருளை உபதேசித்த சிறப்புடையது. பாதிரிப்புலியூர் பெரும்பற்றப்புலியூர் என்பவைகளைப் போல வேறுபாடு தோன்ற வேள்விச் சிறப்பினையுடையது என்னும் பொருளில் இவ்வூருக்கு ஓமமாம் என்னும் அடைமொழி கொடுக்கப்பெற்று இப்போது ஓமாம்புலியூர் என்னும் பெயர் எய்திற்று. உமையம்மைக்கு ''ஓம்'' என்னும் பிரணவப்பொருளை உபதேசித்த தலமாதலின், ஓம்ஆமாம்புலியூர் எனப் பெயர் பெற்றதென்றும் கூறப்படுகின்றது.

இறைவன் - அருள்மிகு துயர்தீர்த்தநாதர் என்றும் பிரணவபுரீசுவரர் எனவும் அழைக்கப்பெறுகிறார். இறைவியின் திருப்பெயர் . பூங்கொடிநாயகி, தலமரம் - இலந்தை, தீர்த்தம் - கௌரி தீர்த்தம் (சந்நிதியில் உள்ளது) வடபுறம் - வரதனாங்குட்டை. தென்புறம் - கொள்ளிடப் பேராறு ஆகிய மூன்று தீர்த்தங்கள் உள்ளன. கோயிலுக்குக் கீழ்ப் பக்கத்தில் கௌரி தீர்த்த கரையில் தனியே ஒரு சிவாலயம் உள்ளது. இதிலுள்ள சிவலிங்கம் பெரிய திருவுருவமாகும். அம்பிகை திருவுருவமும் உள்ளது. இது வடதளிநாதர் என்று அழைக்கப்படுகிறது.

முக்தி பஞ்சாட்சர உபதேசத்தை சுவாமி தட்சிணாமூர்த்தியாக இருந்து அம்பாளுக்கு உபதேசம் செய்தார். அதுசமயம் முருகப்பெருமான் உள்ளே வந்தார். நந்திகேஸ்வரர் முருகனை உள்ளே அனுமதிக்காமல் தடுத்தார். முருகப்பெருமான் வண்டு வடிவம் கொண்டு அபிஷேக தீர்த்தம் வருகிற கோமுகியின் வழியாக உள்ளே சென்று அம்பிகையின் தலையில் இருந்த பூவில் அமர்ந்து கொண்டார். பெருமான் ரகசியமாக அம்பிகைக்கு உபதேசம் செய்ததை முருகப்பெருமான் தானும் அறிந்து கொண்டார். இப்படி அறிந்து கொண்டதைக்




கொண்டே சுவாமிமலையில் தந்தைக்கு உபதேசம் செய்தார் என்பர்.

கிழக்கு நோக்கிய திருக்கோயில். எதிரே கௌரிதீர்த்தம் விளங்குகிறது. வாயிலின் முன்புறம் பலிபீடம் நந்தி மண்டபம் வாகன மண்டபங்கள் உள்ளன. அவற்றைக் கடந்து உள்ளே செல்லும் போது, முதல் வாயிலின் மீது அமைந்துள்ள மூன்று நிலை கோபுரத்தைக் காண்கிறோம். பிரகாரத்தில் வலம் வரும்போது மண்டப கர்ப்பகிரகக் கோஷ்டங்களிலுள்ள விநாயகர், நடராஜர், தக்ஷிணாமூர்த்தித் திருவுருவங்களைக்கண்டு வணங்களாம். வியாக்ரபாத முனிவருக்கு காட்சி கொடுத்த நிலையில் நடராஜர் இங்கு கோஷ்டமூர்த்தியாகக் காட்சி தருகிறார்.

மேற்குப் பிரகாரத்தில் திருமாளிகைப் பத்தி மண்டபம் உள்ளது. அதில் மும்மூர்த்தி, விநாயகர், ஆறுமுகர், மகாலட்சுமி திருவுருவங்கள் உள்ளன. கர்ப்பகிரகக் கோஷ்டத்தினையொட்டி இலந்தை மரம் உள்ளது. அதன் கீழ் அம்பிகையின் தவம் செய்யும் திருவுருவம் உள்ளது. வடபுறக் கோஷ்டங்களில் பிரம்மா, துர்க்கை திருவுருவங்கள் உள்ளன. கோமுகிக்கு அருகில் சண்டிகேசுவரருக்குத் தனிக்கோயில் உள்ளது.

கோயிலின் முன் மண்டபத்தைக் கடந்து அர்த்த மண்டபத்தை அடைந்து சுவாமி சந்நிதியை அடையலாம். வாயிலின் இருபுறமும் துவார பாலகர்கள் காவல் செய்கின்றனர். கருவறையுள் சுவாமி சுயம்பு மூர்த்தியாக உயர்ந்த திருவுருவத்தோடு விளங்குகின்றார்.

இறைவன் உமையவளோடு விரும்பி உறையும் ஓமாம்புலியூர் வடதளிக்கோயில் என்று ஞானசம்பந்தர் அருளிச் செய்துள்ள பாடல்களும், அப்பர் சுவாமிகள் எம் செல்வன் என்று உரிமையோடு பாராட்டி இவ்விறைவனை வழிபடாது பல நாட்கள் கழித்தேனே என்று இரங்கிக்கூறும் பாடல்களும் நம் நினைவிற்கு வருகின்றன.

சுவாமியைத் தரிசித்த பிறகு மகாமண்டபத்தில் தென்முகம் நோக்கிய நிலையில் வீற்றிருக்கும் தக்ஷிணாமூர்த்தியைக் காணலாம். இங்கு இவரே முதன்மை மூர்த்தியாக விளங்குகிறார். மகாமண்டபத்தில் நடராஜர் இருக்கவேண்டிய சபையில் பெரிய திருவுருவமாக இந்தத் தக்ஷிணாமூர்த்தியின் திருவுருவம் விளங்குகின்றது. உமையம்மைக்கு ஓங்காரத்தின் உட்பொருளை உணர்த்தியருளிய மூர்த்தி இவரே. இவரை வழிபட்டு வெளியே வரும்போது முன் மண்டபத்தில் தெற்குமுகம் நோக்கியவாறு அம்பாள் சந்நிதி உள்ளது. பூங்கொடிநாயகி என்ற பெயருக்கேற்ப அம்பிகை எழில் கொஞ்சும் பெரிய திருவுருவுடன் காட்சி அளிக்கின்றாள். இத்திருக்கோயிலின் சிறப்பை விளக்கும் இரு ஐதீகப்புடைப்புச் சிற்பங்கள் முன் மண்டபத்தில் (சுவாமி சந்நிதியின் இருபுறமும்) உள்ளன.

ஒருபுறம் உள்ளது இறைவன் சலந்தராசுரனை அழித்த சக்கரத்தைத் திருமாலுக்கு வழங்கிய நிகழ்ச்சியைக் குறிப்பதாகும். சலந்தரன் அழியாவரம் பெற்று திருமால் பிரமர்களை அடிமையாகக் கொள்வதும், இறைவன் அவனை இருகூறாகப் பிளக்கும் சக்கராயுதத்தை அளிக்கும் நிகழ்ச்சியும் மிக அழகாக செதுக்கப் பெற்றுள்ளன. இத்தலதேவாரத்திருப்பதிகப் பாடலில் இவ்வரலாற்று நிகழ்ச்சியை

**"சம்பரற் கருளிச் சலந்தரன் வீயத்**
**தழலுமிழ் சக்கரம் படைத்த**
**எம்பெரு மானார் இமையவரேத்த**
**இனிதங் குறைவிடம் வினவில்**
**அம்பர மாகி அழலுமிழ் புகையின்**
**ஆகுதி யால்மழை பொழியும்**
**உம்பர்கள் ஏத்தும் ஓமமாம் புலியூர்**
**உடையவர் வடதளி யதுவே"**

- என திருஞானசம்பந்தர் குறித்துள்ளார்.

மற்றொருபுறம் ஐந்து புலியூர்களில் ஐந்து சிவலிங்க உருவங்களை ஐவர் பூசித்துப் பேறுபெற்ற நிகழ்ச்சி செதுக்கப் பெற்றுள்ளது.

பெரும்பற்றப்புலியூர் என்னும் சிதம்பரத்தில் சிவகாமி அம்மையும், ஓமமாம்புலியூரில் வியாக்ரபாதரும், இவ்வாறே ஏனைய தலங்களிலும் சிவபெருமானை வழிபட்டோர் உருவங்களும் செதுக்கப் பெற்றுள்ளன. இக்கோயில் அண்மையில் திருப்பணிகள் செய்யப்பெற்று திருக்குடநன்னீராட்டு நிகழ்த்தப் பெற்றுப் புதுப்பொலிவோடு விளங்குகிறது.

அம்பிகை இறைவனை நோக்கி இத்தலத்தில் இலந்தை மரத்தின் கீழிருந்து தவம் மேற்கொண்டாள். இறைவன் அம்பிகையின் முன் தோன்றி யாது குறித்துத் தவம் செய்கின்றாய்? என்று கேட்க அம்பிகை காரணம் காரியம், தூலம், சூக்குமம், முக்தி என்ற பஞ்சாட்சரங்கள் ஐந்தனுள் முக்தி பஞ்சாட்சரத்திற்கு மூலகாரணமாய் விளங்கும் ''அகார, உகார, மகாரமாகிய'' பிரவணத்தின் உட்பொருளை உபதேசிக்க வேண்டுமென்று கேட்டாள். சிவபிரான் தக்ஷிணாமூர்த்தியாக எழுந்தருளியிருந்து அம்பிகைக்கு அவள் கேட்ட வண்ணம் முக்தி பஞ்சாட்க்ஷரமாகிய பிரணவத்தின் உட்பொருளை உபதேசம் செய்தார். அதனால் சுவாமிக்கு ஸ்ரீ பிரணவ புரீசுவரர் என்ற பெயர் உண்டாயிற்று.

வியாக்கிரபாத முனிவர் இத்தலத்து வந்து இறைவனை வழிபட்டு அருள்பெற்றார். பால முனிவர் என்ற பெயருடைய இம்முனிவர் சிவபூசையின் பொருட்டுக் கொய்யும் மலர்கள் விடிந்து விட்டால் வண்டுகளின் எச்சிற் படுகின்றனவே என்று வருந்தினார். அதனால் அதிகாலையில் பூ பறிக்க ஏதுவாக இறைவனிடம் புலிக்கண்ணும் புலிக்காலும் வேண்டிப் பெற்றார். தில்லை வனத்தில் இரவிற் சென்று மலர் கொய்து வந்து வைத்துப் பகல் முழுவதும் பூசைசெய்பவர். இக்காரணம் பற்றியே இவர் வியாக்ரபாதர் எனப்பெற்றார். இம்முனிவர் சிதம்பரத்தில் நடராசப் பெருமானைத் தரிசித்தற்பொருட்டுத் தலயாத்திரையாக வரும் வழியில் இத்தலத்திற்கருகில் வரும்போது வழிமாறித் திகைத்து நின்றார். பகற்பொழுது கழிந்து மாலைநேரம் வந்தது. சிதம்பரேசனைத் தரிசிக்கும் பெருவேட்கை கொண்டு வந்த முனிவர்க்கு ஆற்றாமை தோன்றியது. நடராசப் பெருமானை மனத்தால் தியானித்து நின்றார்.



சிவபெருமான் அசரீரியாக இங்குள்ள எம்மைப் பூசித்தால் சிதம்பர தரிசனத்தை இத்தலத்திலேயே தருகின்றோம் என்று கூறினார். முனிவர் அவ்வாறே துயரம் தீர்த்த பெருமானைப் பூசித்து மகிழ்ந்தார். இறைவன் நடராஜ மூர்த்தியாகக் காட்சி அளித்து நடம் புரிந்தார். அத்திருவுருவம் தெற்குப் பிரகாரத்தில் உள்ளது. புலிக்கால் முனிவர் பூசித்தமையால் இவ்வூர் புலியூர் எனப்பெயர்பெற்றது.

இத்தலம் இலந்தை மரக்காடாக இருந்த காலத்தில் இப்பகுதிக்கு வேட்டையாடிக் கொண்டு வந்த வேடன் ஒருவன் தன்னைத் துரத்தி வந்த புலிக்குப் பயந்து இங்குள்ள வில்வமரம் ஒன்றில் ஏறிக்கொண்டான். இரவுப்பொழுது வந்தது. புலியும் அவ்விடத்தை விட்டு அகலாமல் நின்றது. வேடன் உறக்கம் வராமல் இருப்பதற்காக வில்வ இலைகளைப் பறித்துப் போட்டுக் கொண்டிருந்தான். அன்று மகா சிவராத்திரி அந்த வில்வ மரத்தடியில் துயரந்தீர்த்தநாதர் சுயம்பு லிங்கத் திருவுருவில் கீழே எழுந்தருளியிருந்தார். இரவு முழுவதும் உறங்காமல் வேடன் பறித்துப் போட்ட வில்வ இலை அவருக்கு அருச்சனையாயிற்று. மகாசிவராத்திரியில் நான்கு யாமத்தும் உறங்காமல் பூசைசெய்த பலன் வேடனுக்கு கிடைத்தது. வேடனுக்கும் புலிக்கும் இறைவன் வீடுபேற்றை அளித்தார்.

**''கொலைத்தொழில் புரியும் புலிக்கும் வேடனுக்கும்**

கூறரும் பெரும்பதம் அளித்த
நிலவுலா வியசெஞ்சடையனே! மணியே!
நின்திரு வடிமலர் அருள்வாய்
புலவர்கள் புகழ்ஓ மாம்புலி யூர்வாழ்
பூங்கொடி நாயகி பாகா!
சிலைமலிகரத்தாய்! துயர்தீர்த்த நாதா!
செல்வமே கருணைவா ரிதியே"-

என்ற தலவரலாற்று பாடல் இவ்வரலாறு நிகழ்ச்சியைக் கூறுகிறது.

சுதானந்தன் என்ற அரசன் தொழுநோயால் மிகவும் வருந்தி இத்தலத்திற்கு வந்து இறைவனை வழிபட்டு வரதனாங்குட்டை என்று வழங்கும் வரந்தரும் தீர்த்தத்தில் நீராடி நாடோறும் வடதளி இறைவனை வழிபட்டுத் தொழுநோய் நீங்கப் பெற்றான்.

கந்தர்வர் இருவர் தேவலோகத்தில் ஏற்பட்ட சாபத்தினால் இவ்வூரில் ஒருவர் தாசியாகவும், ஒருவர் பன்றியாகவும் தோன்றி வாழ்ந்தனர். இருவரையும் புலியொன்று துரத்திற்று. இருவரும் கொள்ளிட நதியில் இறங்கியோட முற்பட்டனர் அத்தீர்த்த விசேடத்தால் இருவரும் உண்மை உருவம் பெற்று இத்தலத்து இறைவனை வழிப்பட்டுக் கந்தர்வலோகம் சென்றார்கள்.

**கல்வெட்டுகள்**

இத்திருக்கோயிலில் மூன்றாம் குலோத்துங்க சோழ தேவரின் காலத்துக் கல்வெட்டு ஒன்றும், பல்லவ அரசரில் சகலபுவன சக்ரவர்த்தி கோப்பெருஞ்சிங்க தேவருடைய காலத்துக் கல்வெட்டு ஐந்தும் ஆக ஆறு கல்வெட்டுக்கள் உள்ளன. சோழ மன்னர் காலத்துக் கல்வெட்டில் இறைவரின் திருப்பெயர் வடதளி உடையார் என்றும், பல்லவர் காலத்துக் கல்வெட்டில் வடதளி உடைய நாயனார் எனவும், வடதளி உடையார் வரும் துயரம் தீர்த்த நாயனார் எனவும் குறிக்கப் பெற்றுள்ளது. சோழர் பல்லவர் காலங்களில் இவ்வூர் வடகரை விருதராசபயங்கர வளநாட்டு மேற்கா நாட்டுப் பிரதேயம், ஓமாம் புலியூராகிய உலகளந்த சோழ சதுர்வேதிமங்கலம் எனக் குறிக்கப் பெற்றுள்ளது.

விருதராசபயங்கர வளநாட்டின் உட்பகுதியாய் அடங்கிய நாடுகளில் காநாடு என்பது ஒன்றாகும், அது மேற்காநாடு கீழ்காநாடு என்னும் இருபகுதிகளை உடையது. இவற்றுள் கொள்ளிடப் பேராற்றின் வடகரையை ஒட்டிய பிரதேசமாகிய ஓமாம்புலியூர் திருக்கடம்பூர் ஆகியவை மேற்கா நாட்டைச் சேர்ந்தனவாகும். இவ் ஓமாம்புலியூருக்குக் கிழக்கேயுள்ள திருக்கானாட்டு முள்ளூர், கீழ்க்காநாட்டைச் சேர்ந்ததாகும். இவ் ஓமாம்புலியூருக்கு அண்மையில் 'ஆதனூர் என்னும் ஊர் இருக்கிறது. இதுவே திருநாளைப்போவார் அவதரித்த பதியாகும். ஆதனூர் பதியைச் சேக்கிழார் மேற்கா நாட்டு ஆதனூர் என்று குறித்திருப்பதை அறிய இவ்வூர்க் கல்வெட்டுப் பெரிதும் ப்யன்படுகின்றது.

இங்கு தட்சிணாமூர்த்தி சிவனுக்கும் அம்பாளுக்கும் மத்தியில் மகா மண்டபத்தில் அமர்ந்து அருள்பாலிப்பதால் இவ்வூர் குருவழிபாட்டிற்குரிய தலங்களில் தலைசிறந்ததாக கருதப்படுகிறது.

ஆலங்குடியைப் போலவே இங்கும் தட்சிணாமூர்த்திக்குச் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன.

ஓமமாம்புலியூர் செல்வோமே! புஷ்பலதாம்பிகை சமேத பிரணவ வியாக்புரீஸ்வரர் அருள் பெறுவோமே!!



சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர் : திருமிகு **த. பிச்சாண்டி**, இ.ஆ.ப., சிறப்பு ஆணையாளர்
தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறை, சென்னை - 600 034. தொலைபெசி : 28334811/12/13
ஆசிரியர் (கூ.பொ.) : ம. தேவேந்திரன், பி.எஸ்சி., பி.எல்., துணை ஆணையர்
அச்சிடுவோர் : குணசுந்தரி மாடர்ன் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை -21. தொலைபேசி : 25967929

# தொடரும் திருப்பணிகள்



ஈரோடு மாவட்டம், பவானி, அருள்மிகு சங்கமேஸ்வரர் திருக்கோயிலில் ரூ50 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள பக்தர்கள் தங்கும் விடுதிக்கான அடிக்கல் நாட்டு விழாவும், வணிக வளாகக்கட்டடத் திறப்பு விழாவும் 14.12.2008 அன்று நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு கே ஆர்.பெரியகருப்பன் அவர்கள் கலந்து கொண்டு அடிக்கல் நாட்டியும், வணிகவளாகத்தினைத் திறந்து வைத்தும் சிறப்பித்தார்.



ஈரோடு மாவட்டம், பாரியூர் அருள்மிகு கொண்டத்து காளியம்மன் திருக்கோயிலில் ரூ 64 லட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள திருமண மண்டபத்தினை மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. கே ஆர். பெரியகருப்பன் அவர்கள் 14.12.2008 அன்று திறந்து வைத்து சிறப்பித்தார்.



பதிவு எண் : TN / CH(C) / 305 / 09-11 / WPP No. 451/06-08



# அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்
## பழனி
## தைப்பூசத் திருவிழா 2009ம் ஆண்டு அழைப்பிதழ்

அறுபடை வீடுகளில் மூன்றாம் படைவீடாக விளங்கும் பழனியம்பதியாம் அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் தைப்பூசத்திருவிழா திருவள்ளுவர் ஆண்டு 2040 தைத்திங்கள் 20ம் நாள் (02.02.2009) தொடங்கி தைத்திங்கள் 29ம் நாள் (11.02.2009) முடிய கீழ்க்கண்ட விவரப்படி வெகுசிறப்பாக நடைபெறவுள்ளது. பக்தர்கள் அனைவரும் வந்திருந்து அருள்மிகு முருகப்பெருமான் கழலடி பணிந்து திருவருள் பெற்று இன்புற வேண்டுகிறோம்.

| வ.எ. | ஆங்கில தேதி | தமிழ் தேதி | கிழமை | விழா மற்றும் வாகனம் விவரம் |
|---|---|---|---|---|
| 1 | 02-02-2009 | தை - 20 | திங்கள் | காலை 9.00 மணிக்கு மேல் 10.30 மணிக்குள் துவஜாரோகணம் (கொடியேற்றம்) |
| 2 | 03-02-2009 | தை - 21 | செவ்வாய் | வெள்ளி ஆட்டுக்கிடா |
| 3 | 04-02-2009 | தை - 22 | புதன் | வெள்ளி காமதேனு |
| 4 | 05-02-2009 | தை - 23 | வியாழன் | வெள்ளி காமதேனு |
| 5 | 06-02-2009 | தை - 24 | வெள்ளி | வெள்ளி யானை |
| 6 | 07-02-2009 | தை - 25 | சனி | மாலை 6.00 மணிக்கு மேல் 7.00 மணிக்குள் அருள்மிகு வள்ளிதெய்வநாயகியம்மன் முத்துக்குமார சுவாமி திருக்கல்யாணம் இரவு 8.30 மணிக்கு வெள்ளி ரதம் |
| 7 | 08-02-2009 | தை - 26 | ஞாயிறு | மாலை 4.25 மணிக்கு திருத்தேர் வடம் பிடித்தல் |
| 8 | 09-02-2009 | தை - 27 | திங்கள் | தங்க குதிரை வாகனம் |
| 9 | 10-02-2009 | தை - 28 | செவ்வாய் | பெரிய தங்கமயில் |
| 10 | 11-02-2009 | தை - 29 | புதன் | மாலை 5,30 மணிக்கு மேல் 6.30 மணிக்குள் தெப்பத்தேர் இரவு 11.30 மணிக்கு த்வஜாவரோஹணம் (கொடி இறக்குதல்) |


**தி.இராசமாணிக்கம், பி.ஏ.,பி.எல்.,**
இணை ஆணையர் / செயல் அலுவலர்

**கோ.செ.மங்கையர்க்கரசி, பி.எஸ்.சி., எம்.எல்.,**
துணை ஆணையர்

**நா.நடராஜன், எம்.எஸ்.சி., பி.எல்.,**
உதவி ஆணையர் / நேர்முக உதவியாளர்

**டாக்டர் ச.வே. பாலசுப்பிரமணியம்**
அறங்காவலர்குழுத் தலைவர்

**கார்த்தி ப. சிதம்பரம்**
**இந்திரா ரவிச்சந்திரன்** அறங்காவலர்கள்
**ஆ. நாகராஜன்**



நவீன தொழில்நுட்பத்துடன்
பஞ்சாமிர்தம் தயாரிக்கும் கூடம்